


PRGI No. TNBIL/25/A1569

வைகறையில்

# பேப்பர்பாய்

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY




சென்னை மலர்: 01 இதழ்: 226 29.03.2026 ஞாயிற்றுக்கிழமை ▸▸Chennai ▸▸Volume: 01 ▸▸Issue: 226 ▸▸Sunday ▸▸pages 8 ▸▸Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMILNADU AND PUDUCHERRY

### இன்றைய நாள்

ஞாயிற்றுக்கிழமை
(29-03-2026)
விசுவாவசு ஆண்டு, பங்குனி-15
பிறை: வளர்பிறை
திதி
ஏகாதசி காலை 9.32 வரை
பிறகு துவாதசி.
நட்சத்திரம்:
ஆயில்யம் மாலை 4.04
வரை பிறகு மகம்
யோகம்
சித்த/மரணயோகம்
ராகுகாலம்
மாலை 4.30-6.00 மணி
எமகண்டம்
நண்பகல் 12.00-1.30 மணி.
சூலம் - மேற்கு.
நல்ல நேரம் :
காலை 7-8 மணி.
மாலை 3-4 மணி.

| | |
|---|---|
| மேஷம் | நட்பு |
| ரிஷபம் | நலம் |
| மிதுனம் | நன்மை |
| கடகம் | லாபம் |
| சிம்மம் | அன்பு |
| கன்னி | வரவு |
| துலாம் | செலவு |
| விருச்சிகம் | ஆதாயம் |
| தனுசு | மகிழ்ச்சி |
| மகரம் | சிறப்பு |
| கும்பம் | இன்பம் |
| மீனம் | உறுதி |

# அமமுக வேட்பாளர் பட்டியல் வெளியானது!

## முன்னாள் அமைச்சர்களுக்கு வாய்ப்பு

**சென்னை, மார்ச் 29:**

தமிழக சட்டப்பேரவையில் அதிமுக கூட்டணியில் பாஜக, அமமுக உள்ளிட்ட கட்சிகள் இணைந்து போட்டியிடும் நிலையில், அமமுக போட்டியிடும் 11 தொகுதிகளின் விவரங்களை அதிமுக பொதுச் செயலர் எடப்பாடி பழனிசாமி கடந்த வாரம் வெளியிட்ட நிலையில், அந்தத் தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர் விவரங்கள் இன்று வெளியாகியிருக்கிறது.

11 தொகுதிகளில், பூவிருந்தமல்லி (தனி) - ஏழுமலை, மன்னார்குடி - எஸ் காமராஜ், சைதாப்பேட்டை -செந்தமிழன், மடத்துக்குளம் முன்னாள் அமைச்சர் சண்முகவேலு, காரைக்குடி - தேர்போகி பாண்டி, திருப்பத்தூர் - ஞானசேகரன், திருச்சி மேற்கு - தொட்டியம் ராஜேசேகரன், ஒட்டப்பிடாரம் (தனி)- சுந்தர்ராஜன், பெரியகுளம் (தனி) - கதிர்காமு, நான்குநேரி - இசக்கிமுத்து, திருவையாறு - வேலுகார்த்திகேயன் ஆகியோர் போட்டியிடுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக சட்டப்பேரவைத் தோதலையொட்டி அதிமுக-பாஜக இணைந்து உருவாக்கிய தேசிய ஜனநாயகக் கூட்டணியில் பாமக, அமமுக, தமாகா, ஐஜேகே, புதிய நீதிக் கட்சி, தமிழக மக்கள் முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட பல கட்சிகள் கூட்டணி அமைத்துள்ளன.



இந்த கூட்டணிக் கட்சிகளில் பாஜகவுக்கு 27, பாமகவுக்கு 18, அமமுகவுக்கு 11 தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

அதிமுக - பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் தொகுதி பங்கீடு தொடர்பான பேச்சுவார்த்தை ஒரு சில வாரங்களாக தொடர்ந்து நடைபெற்று இறுதி செய்யப்பட்டு அடுத்தடுத்து கட்சிகளுக்கான தொகுதிகள் ஒதுக்கீடு அறிவிக்கப்பட்டது. இந்த நிலையில், வேட்பாளர்கள் பட்டியலும் வெளியாகி வருகிறது.

மடத்துக்குளம் தொகுதியில் அமமுக சார்பில் போட்டியிடும் சி. சண்முகவேலு, முன்னாள் எம்எல்ஏ ஆவார். 2001ஆம் ஆண்டு மடத்துக்குளம் தொகுதியிலிருந்தும் 2006ஆம் ஆண்டு உடுமலைப்பேட்டை தொகுதியிலிருந்தும் அதிமுக வேட்பாளராகப் போட்டியிட்டு எம்எல்ஏ ஆனவர்.

தமிழக முதல்வராக ஜெயலலிதா இருந்தபோது, கிராமப்புற தொழில்துறை அமைச்சர் பதவி அளிக்கப்பட்டு, அமைச்சரவை மறுசீரமைப்பின்போது வெறும் ஐந்து மாதக் காலத்தில் அமைச்சரவையிலிருந்து நீக்கப்பட்டார்.

ஜி செந்தமிழன், 2011ஆம் ஆண்டு பேரவைத் தேர்தலில் சைதாப்பேட்டை தொகுதியில் போட்டியிட்டு எம்எல்ஏ ஆனவர். தொழில்நுட்பத் துறை, சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சராக பதவி வகித்து, அப்போது தமிழக முதல்வராக இருந்த ஜெயலலிதாவின் அமைச்சரவைமாற்றத்தின்போது அமைச்சரவையிலிருந்து நீக்கப்பட்டார்.

திமுக தலைமையிலான கூட்டணியில், இன்னமும் கூட்டணிக் கட்சிகளுக்கு ஒதுக்க வேண்டிய தொகுதிகளை இறுதி செய்வதில் இழுபறியாகவே தொடர்கிறது.

# தவெக வேட்பாளர்கள் நாளை வேட்புமனு தாக்கல்

**சென்னை, மார்ச் 29:**

பெரம்பூர் தொகுதியில் இருந்து அவர் பிரசாரம் செய்ய முடிவு செய்திருந்தார். பெரம்பூர் முல்லை நகரில் இருந்து பிரசாரத்தை தொடங்க தேர்தல் ஆணையத்தில் அனுமதி கோரப்பட்டது.

ஆனால் விஜய் பிரசாரத்துக்கு தேர்தல் ஆணையம் அனுமதி கொடுக்கவில்லை. விஜய் அனுமதி கேட்ட இடத்தில் சாலையில் பள்ளம் தோண்டி பணிகள் நடக்கிறது. மேலும் அந்த இடம் இரும்பு தடுப்புகளால் அடைக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி த.வெ.க. தலைவர் விஜய் வெளியிட்டுள்ள எக்ஸ் வலைதள பதிவில், 'பிரசாரத்தை தொடங்குவதற்கு 2 நாட்களுக்கு முன்பே அனுமதி கோரிய நிலையில், ஒரு நாளுக்கு முன்பு அந்த இடத்தில் மாநகராட்சி சார்பில் சாலையில் பள்ளம் தோண்டி இரும்பு தடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளது. இந்த திடீர் பள்ளமும், இரும்பு தடுப்புகளும் எங்கிருந்து வந்தது?' என்று குற்றம்சாட்டி இருந்தார்.

இதற்கு சென்னை மாநகராட்சி விளக்கம் அளித்து உள்ளது. 'அந்த இடத்தில் குடிநீர் குழாயில் உடைப்பு ஏற்பட்டதால் அதை சரி செய்ய குடிநீர் வாரியம் சார்பில் சாலையில் பள்ளம் தோண்டப்பட்டு பணிகள் நடைபெற்றது. அந்த பணிகளும் முடிந்து விட்டது. எனவே அனுமதி மறுக்கப்பட்டதற்கு அது காரணம் இல்லை. உண்மையான காரணம் தேர்தல் நடத்தும் அலுவலரின் ஆணையில் தெளிவாக குறிப்பிடப்பட்டு உள்ளது' என்று கூறியுள்ளது.

இதற்கிடையே விஜய் பிரசாரம் செய்ய அனுமதி கேட்டிருந்த முல்லை நகர் பகுதி தெருமுனை கூட்டம் நடத்துவதற்கு மட்டுமே உகந்த இடம். ஆனால் விஜய் பிரசார கூட்டத்தில் 3 ஆயிரம் பேர் கூடுவார்கள் என்று



குறிப்பிடப்பட்டு இருந்ததால் அனுமதி கொடுக்கவில்லை. அதற்கு பதிலாக வேறு ஒரு இடத்தை தேர்வு செய்யுமாறு தேர்தல் அதிகாரி தரப்பில் தெரிவித்துள்ளதாக கூறப்படுகிறது.

இதையடுத்து விஜய் பிரசாரத்தை தொடங்குவதற்காக பெரம்பூர் தொகுதியில் வேறு இடத்தில் அனுமதி கேட்டு தேர்தல் ஆணையத்தில் மனு அளிக்கப்பட்டுள்ளது. இந்த முறை தெருமுனை கூட்டத்துக்கே அனுமதி கேட்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே சட்டசபை தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் நாளை (30-ந்தேதி) தொடங்க உள்ளது. த.வெ.க. வேட்பாளர்கள் நாளை அறிமுகம் செய்யப்பட உள்ள நிலையில் பெரம்பூர் தொகுதியில் விஜய் போட்டியிடுகிறார். இதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பு நாளை வெளியாகிறது.

இதையடுத்து 234 தொகுதிகளிலும் போட்டியிடும் த.வெ.க. வேட்பாளர்கள் நாளை மறுநாள் (30-ந்தேதி) வேட்பு மனுதாக்கல் செய்ய முடிவு செய்துள்ளனர். பெரம்பூர் தொகுதியில் விஜய் மனு தாக்கல் செய்கிறார்.

மேலும் விஜய் பிரசாரத்துக்கு தேர்தல் ஆணையம் அனுமதி கொடுக்கும் நிலையில் வருகிற 30-ந்தேதி பெரம்பூரில் இருந்து விஜய் பிரசாரத்தை தொடங்கவும் திட்டமிட்டுள்ளார்.

# மதுரை மத்திய தொகுதியில் சுந்தர் சி போட்டி

### புதிய நீதிக் கட்சி வேட்பாளராக அறிவிப்பு



**சென்னை, மார்ச் 29:**

தேசிய ஜனநாயகக் கூட்டணியில் அஇஅதிமுக சார்பில் புதிய நீதிக் கட்சிக்கு ஒதுக்கப்பட்டுள்ள மதுரை மத்திய தொகுதியின் வேட்பாளராக சுந்தர் சி அறிவிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக புதிய நீதி கட்சி தலைவர் ஏ.சி. சண்முகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "2026 சட்டமன்றத் தேர்தலில், தேசிய ஜனநாயகக் கூட்டணியில் அஇஅதிமுக சார்பில் புதிய நீதிக் கட்சிக்கு ஒதுக்கப்பட்டுள்ள மதுரை மத்திய தொகுதியில் திரைப்பட தயாரிப்பாளரும் இயக்குநரும் நடிகருமான சுந்தர் சி (சிதம்பரம் பிள்ளையின் மகன்) வேட்பாளராக நிறுத்தப்படுகிறார். இதை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

புதிய நீதிக் கட்சிக்கு ஒதுக்கப்படும் தொகுதி மற்றும் போட்டியிடும் வேட்பாளர் பெயர் ஆகியவை பாஜக சார்பில் வரும் திங்கள் கிழமை அறிவிக்கப்பட உள்ளது. அறிவிப்பு வெளியானதும் முறைப்படி வேட்பாளரை அறிமுகப்படுத்த உள்ளோம்" என தெரிவித்துள்ளார்.

அதிமுக கூட்டணியில் ஏற்கெனவே பாஜகவுக்கு 27 தொகுதிகள், பாமகவுக்கு 18 தொகுதிகள், அமமுகவுக்கு 11 தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டன.

அதனைத் தொடர்ந்து ஜி.கே.வாசனின் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சிக்கு 5 தொகுதிகள், பாரிவேந்தரின் இந்திய ஜனநாயக கட்சிக்கு 2 தொகுதிகள், ஜான் பாண்டியனின் தமமுகவுக்கு 1, புரட்சி பாரதம் கட்சிக்கு 1 தொகுதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

தமாகாவுக்கு ஒதுக்கப்பட்ட 5 தொகுதிகளிலும், அக்கட்சி தாமரை சின்னத்தில் போட்டியிடும் என அதன் தலைவர் ஜி.கே.வாசன் அறிவித்தது குறிப்பிடத்தக்கது.

# சென்னை மதுரவாயலில் ரூ. 5 கோடி பணம் பறிமுதல்!



**சென்னை, மார்ச் 29:**

தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான தேதி அறிவிக்கப்பட்ட நிலையில் தேர்தல் நடத்தை விதிகள் அமலில் உள்ளன. இதன்படி, தனிநபர் ஒருவர் எவ்வித ஆவணங்களும் இன்றி ரூ. 50,000 வரை ரொக்கமாக எடுத்துச் செல்லலாம்.

அதற்கு மேலாக உரிய ஆவணங்கள் இன்றி எடுத்துச் செல்லப்படும் பணம் மற்றும் பிற பொருள்கள் தேர்தல் ஆணையத்தால் பறிமுதல் செய்யப்பட்டு வருகின்றன.

இதற்காக தேர்தல் செலவினக் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்தது முதல் தமிழகத்தில் இதுவரை ரூ. 270 கோடிக்கும் அதிகமான மதிப்பிலான பணம் மற்றும் பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

தொடர்ந்து இன்று சென்னை மதுரவாயலில் தேர்தல் பறக்கும் படை சோதனையின் போது தனியார் ஏஜென்சி வாகனத்தில் உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு வரப்பட்ட ரூ. 5 கோடி பணம் பறிமுதல் செய்யப்பட்டது.

டாஸ்மாக் கடைகளில் வசூலான பணம் என கூறப்பட்ட நிலையில் அலுவலகத்தில் இருந்து உரிய ஆவணம் கொண்டு வந்ததை அடுத்து அதுதொடர்பாக அதிகாரிகள் சரிபார்த்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# பிரதமர் - ட்ரம்ப் தொலைபேசி உரையாடல் பயனுள்ளதாக இருந்தது: வெள்ளை மாளிகை

**வாஷிங்டன் டி.சி, மார்ச் 29:**

அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப், பிரதமர் நரேந்திர மோடியுடன் கடந்த செவ்வாய் கிழமை தொலைபேசியில் உரையாடினார். அப்போது, மேற்காசியாவில் நிகழும் மோதல்களை முடிவுக்குக் கொண்டு வருவது குறித்து இரு தலைவர்களும் விவாதித்தனர். இரு தலைவர்களுக்கு இடையேயான இந்த உரையாடலில், கோடீஸ்வர தொழிலதிபர் எலான் மஸ்க்கும் இணைந்ததாக நியூயார்க் டைம்ஸ் செய்தி வெளியிட்டது. எனினும், எலான் மஸ்க் என்ன பேசினார் என்பது குறித்து எதுவும் தெரிவிக்கவில்லை.



இரு நாட்டு தலைவர்கள் இடையேயான தொலைபேசி உரையாடலில் அரசாங்க தொடர்பு இல்லாத ஒரு தனி நபர் இணைவது பேசுபொருளானது. இது குறித்து ஏஎன்ஐ செய்தி நிறுவனம் எழுப்பிய கேள்விக்கு பதில் அளித்த வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் கரோலின் லீவிட், "அதிபர் ட்ரம்ப்புக்கு பிரதமர் மோடியுடன் ஒரு சிறந்த உறவு உள்ளது. மேலும், இது ஒரு பயனுள்ள உரையாடலாக இருந்தது" என்று தெரிவித்தார்.

டொனால்டு ட்ரம்ப் இரண்டாவது முறையாக அதிபர் ஆனதும், அந்த அரசில் எலான் மஸ்க்கும் இடம் பெற்றிருந்தார். பணியாளர் எண்ணிக்கையை குறைக்கும் பொறுப்பு அவருக்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும், இருவருக்கும் இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக கடந்த ஆண்டு எலான் மஸ்க் பொறுப்பில் இருந்து விலகினார். இந்நிலையில், ட்ரம்ப் மற்றும் மஸ்க் இடையே மீண்டும் நல்லுறவு ஏற்பட்டிருக்கிறது. இரண்டு அமெரிக்க அரசு உயர் அதிகாரிகள் இதனை உறுதிப்படுத்தி இருப்பதாக நியூயார்க் டைம்ஸ் தெரிவித்துள்ளது.

பிரதமர் மோடியுடன் அதிபர் ட்ரம்ப் தொலைபேசியில் ஆலோசனை நடத்தியது குறித்து இந்தியாவுக்கான அமெரிக்க தூதர் செர்ஜியோ கோர் சமூக வலைதளத்தில் வெளியிட்ட பதிவில், "பிரதமர் மோடியுடன் அதிபர் ட்ரம்ப் தொலைபேசியில் பேசினார். மேற்கு ஆசிய நிலவரம் குறித்து இருவரும் ஆலோசித்தனர். ஹார்முஸ் ஜலசந்தியை திறப்பது குறித்தும் இருவரும் ஆலோசனை நடத்தினர்" என்று தெரிவித்திருந்தார்.

பிரதமர் நரேந்திர மோடி சமூக வலைதளத்தில் வெளியிட்ட பதிவில், "அதிபர் ட்ரம்ப்பிடம் இருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. மேற்கு ஆசியா நிலவரம் குறித்து இருவரும் ஆக்கப்பூர்வமான கருத்துகளைப் பரிமாறிக் கொண்டோம். மேற்கு ஆசியாவில் பதற்றத்தைத் தணித்து உடனடியாக அமைதியை ஏற்படுத்த இந்தியா முழு ஆதரவு அளிக்கிறது. ஒட்டுமொத்த உலகத்துக்காகவும் ஹார்முஸ் ஜலசந்தி திறக்கப்பட வேண்டும். அமைதி முயற்சி தொடர்பாக இருவரும் தொடர்ந்து தொடர்பில் இருப்போம்" என்று தெரிவித்திருந்தார்.

# ஹோர்முஸ் நீரிணை: எல்பிஜியுடன் இந்தியாவுக்கு மேலும் 2 கப்பல்கள்!

**புது டில்லி, மார்ச் 29:**

ஈரான் மீது இஸ்ரேலும் அமெரிக்காவும் இணைந்து தாக்குதல் நடத்தி வருகிறது. இதனைத் தொடர்ந்து, ஈரானும் உரிய பதிலடி கொடுத்து வருகிறது.

இதனிடையே, உலகளாவிய எண்ணெய் வர்த்தகத்தில் முக்கிய பங்களிக்கும் ஹோர்முஸ் நீரிணையையும் ஈரான் மூடியது. இதனால், உலகளவில் கச்சா எண்ணெய் வர்த்தகம் பாதிக்கப்பட்டு. சில நாடுகளில் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து, அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் அவர்களின் நட்பு நாடுகளின் கப்பல்களைத் தவிர, மற்ற நாட்டு கப்பல்களுக்கு ஈரான் அனுமதி அளித்துள்ளது. மேலும், எல்பிஜி ஏற்றிக் கொண்டு இந்தியாவுக்கும் சில சரக்குக் கப்பல்கள் வந்தடைந்தன.

இருந்தபோதிலும், இந்தியாவிலும் எரிவாயு, பெட்ரோல் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதாக வதந்திகள் பரவி வரும்நிலையில், அதனை மத்திய அரசு தொடர்ந்து மறுத்து வருகிறது.

இந்த நிலையில், ஹோர்முஸ் நீரிணையைக் கடந்து மேலும் 2 சரக்குக் கப்பல்கள் இந்தியாவுக்கு வரவிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவை விரைவில் இந்தியா வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



## மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் பங்குனி கோடை வசந்த உற்சவம்



மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் பங்குனி கோடை வசந்த உற்சவம் 2026-27.03.2026-5ம் நாள் மாலை ஊஞ்சல் சேவை ஆணோ, அலியோ, அரிவையோ, என்று இருவர் காணாக் கடவுள்; கருணையினால், தேவர் குழாம் நாணாமே உய்ய, ஆட்கொண்டருளி, நஞ்சு தனை ஊண் ஆக உண்டருளும் உத்தரகோசமங்கைக் கோண் ஆர் பிறைச்சென்னிக் கூத்தன்; குணம் பரவி, பூண் ஆர் வனமுலையீர் ! பொன் ஊசல் ஆடாமோ - திருப்பொன்னூசல் 08.16.05-திருவாசகம் . சொக்கே நின் தாளே துணை

## இடைக்காட்டூர் திருஇருதய ஆண்டவர் திருத்தலத்தில் தவக்கால வழிபாடு

**மானாமதுரை, மார்ச்29:**
சிவகங்கை மாவட்டம், மானாமதுரை அரு கேயுள்ள இடைக்காட்டூரில் அமைந்துள்ள திருஇருதய ஆண் டவர் திருத்தலத்தில் நடைபெற்ற தவக்கால வழி பாட்டில் திரளான கிறிஸ்தவர் கள் பங்கேற்றனர். இயேசுவின் பாடுகள், இறப்பு, அவரது உயிர்ப்பு ஆகியவற்றை நினைவு கூரும் வகையில் கிறிஸ் தவர்களால் 40 நாள்கள் தவக்கா லம் கடைப்பிடிக்கப்படுகிறது.

மேலும், இந்த நாள்களில் சிலு வைப் பாதை, தவம், அறச்செயல் கள் புரிவது, ஏழைகளுக்கு தாரா ளமாக உதவுவது, திருயாத்திரை செல்வது ஆகியவை தங்களை அடையாளப்படுத்தும்செயலாக கிறிஸ்தவர்கள் கருதுகின்றனர்.

இந்த நிலையில், தர்மபுரி, கோயம்புத்தூர், உதகை, நாகர் கோவில், தூத்துக்குடி, கும்பகோ ணம், செங்கல்பட்டு, சென்னை, தஞ்சாவூர், புதுக்கோட்டை, நெல்லை என தமிழகத்தின் பல் வேறு பகுதிகளிலிருந்து திருபயணிகள் வருகை தந்தனர்.

ஏராளமான பக்தர்கள் மதுரை யில் இருந்து பாதயாத்திரையாக இடைக்காட்டூர் திரு இருதய ஆண்டவர் திருத்தலத் தலத்திற்க்கு வருகை தந்தனர்.

திருபயணிகளுக்காக நிறைவேற்றப்பட்ட சிறப்பு





ஆகி யோர் பங்கேற்றனர். இதற்கான ஏற்பாடுகளை திருத் தல அருட் பணியாளர் ஜான் வசந்தகுமார், பிரின்ஸ் ஆகியோர் செய்தனர்.

## காங்கிரசில் இணைந்தார் ஜி.கே.மணியின் மகன்



**சென்னை, மார்ச் 29:**
தமிழகத்தில் தேர்தல் களம் சூடு பிடித்துள்ள நிலையில், ராமதாஸ் தரப்பு பா.ம.க. மூத்த தலைவர் ஜி.கே. மணியின் மகன் தமிழ்க்குமரன் காங்கிரசில் இணைந்தார்.

ராமதாஸ் தரப்பு பா.ம.க. மூத்த தலைவர் ஜி.கே. மணியின் மகன் தமிழ்க்குமரன் டெல்லியில் காங்கிரஸ் அமைப்பு பொதுச்செயலாளர் கே.சி.வேணுகோபால் முன்னிலையில் காங்கிரசில் இணைந்துக்கொண்டார்.

காங்கிரசில் இணைந்த தமிழ்க்குமரன் தேர்தலில் போட்டியிட உள்ளதாக கூறப் படுகிறது.

ராமதாஸ் தரப்பு பா.ம.க.வின் இளைஞரணி தலைவராக தமிழ்க்குமரன் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## லால்குடி தொகுதியில் நடிகர் மன்சூர் அலிகான் போட்டி- வேலைக்காரனை தேர்ந்தெடுங்கள் என அதிரடி பிரசாரம்

**திருச்சி, மார்ச் 29:**
தமிழ் திரை உலகில் வில்லன் நடிகராக மக்களை கவர்ந்து வருபவர் மன்சூர் அலிகான். அவரது யதார்த்தமான பேச்சும், இயல்பான நடிப்பும் மக்களிடையே நல்ல வரவேற்பு பெற்றதால் அவருக்கென தனி இடம் இருந்து வருகிறது.

மன்சூர் அலிகான் நடிகராக மட்டுமின்றி இந்திய ஜனநாயக புலிகள் என்ற கட்சியையும் நடத்தி வருகிறார். வருகிற சட்டமன்ற தேர்தலில் அவரது இந்திய ஜனநாயக புலிகள் கட்சி திருச்சி மாவட்டத்தில் 4 தொகுதிகளில் போட்டியிடுகிறது. லால்குடியில் மன்சூர் அலிகான் போட்டியிடுகிறார். இதே தொகுதியில் அ.தி.மு.க. சார்பில் லீமா மார்ட்டின் போட்டியிடுகிறார்.

தேர்தலில் போட்டியி டுவது குறித்து மன்சூர் அலிகான் கூறியதாவது:-


நான் 2011-லேயே திருச்சியில் தனியாக போட்டியிட்டேன். நான் வளர்ந்த ஊர் பள்ளப்பட்டி. திருச்சி மாவட்டத்தில் இருந்தது. நாங்கள் இந்திய ஜனநாயகப்புலிகள் சார்பாக தி.மு.கவில் சீட் கேட்டோம். 6




மாதமாக அலைந்தோம் பிறகு எடப்பாடியாரை சந்தித்து சில முறை பேசினேன். யாரும் கண்டுக் கொள்ளாததால் 4 தொகுதிகளில் போட்டியிட உள்ளோம்.

லால்குடி, திருச்சி கிழக்கு, திருவெறும்பூர், மணப்பாறை தொகுதிகளில் போட்டியிடுகிறோம். இங்கு 10 முறை 5 முறை வென்றவர்களால் வாழை சாகுபடி விவசாயிகளின் தேவைகள், பொதுமக்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாமலேயே உள்ளது. தமிழ்நாடெங்கும் போதைப்பொருள்சிறுவர்களுக்கு தங்கு தடையில்லாமல் கிடைக்கிறது. போலீஸ் துறை ஏன் தடுக்கவில்லை? மக்கள் எங்களுக்கு நிச்சயமாய் வாக்களிப்பர். வீட்டுக்கு வீடு சென்று வாக்கு கேட்க உள்ளோம் என்றார்.

## தாயமங்கலம் முத்து மாரியம்மன் கோவிலில் திருவிழா கொடியேற்றம்



**மானாமதுரை, மார்ச் 29:**
சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே உள்ள பிரசித்தி பெற்ற ஸ்ரீதாயமங்கலம் முத்து மாரியம்மன் கோவிலில் பங்குனி பொங்கல் விழா இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 10 மணிக்கு கொடி யேற்றத்துடன் துவங்குகிறது.

கோவிலில் பிரசித்தி பிரசித்தி பெற்ற பெற்ற தாயமங்கலம் முத்துமாரியம்மன் ஆண்டுதோறும், பங்குனித் திருவிழா தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறுவது வழக்கம். ராமநாதபுரம், மதுரை, தேனி, திண்டுக்கல், விருதுநகர், உள்ளிட்ட பல்வேறு பகுதி களில் இருந்தும் பக்தர்கள் வந்து செல்வார்கள். பக்தர்கள், அம்மனுக்கு பொங்கல் வைத்தும், ஆடு, கோழிகளை பலியிட்டும், அக்னிசட்டி எடுத்தும் நேர்த்தி கடன் செலுத்துவர்.

முக்கிய நிகழ்ச்சி பொங்கல் விழா ஏப்.5ம் யான தேதி நடைபெற உள்ளது. 6ம் தேதி மின் அலாரங்கார தேர் பவனியும், 7ம் தேதி பால்குடம், ஊஞ்சல் உற்ஸவமும், பூப்பல் லக்கு நிகழ்ச்சியும், 8ம் தேதி இரவு திருக்கோயில் தீர்த்தவாரி நிகழ்ச்சி யுடன்திருவிழா நிறைவுபெறுகிறது.

விழாவிற்கான ஏற்பாடுகளை பரம்பரை அறங்காவலர் வெங்க டேசன்செட்டியார் மேற்பார்வையில் கோவில் பணி யாளர்கள், கிராம மக்கள், பக்தர்கள் செய்து வருகின்றனர்.

## சிவகங்கையில் தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சி இளம் வாக்காளர்கள் அனைவரும் தேர்தல் திருவிழாவில் ஆர்வத்துடன் வாக்களிக்க வேண்டும்

### கலெக்டர் பொற்கொடி பேச்சு

**சிவகங்கை, மார்ச் 29:**
சிவகங்கை மாவட்டம், தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தலை முன்னிட்டு பொதுமக்களிடையே 100 சதவீதம் வாக்களிப்பதன் - அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திடும் - பொருட்டு, சிவகங்கை சட்ட மன்ற தொகுதிக்குட்பட்ட கல்லூரியில் நடைபெற்ற விழிப்புணர்வு ரங்கோலி கோலப்போட்டி நிகழ்ச்சி யினை, மாவட்ட கலெக்டர் பொற்கொடி பார்வை யிட்டார். பின்னர் அவர் கூறியதாவது:-

இந்திய தேர்தல் ஆணை யத்தின் உத்தரவின்படி, தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் அடுத்த மாதம் 23-ம் தேதியன்று நடைபெற வுள்ளது. அதன்படி, சிவ கங்கை மாவட்டத்தில் பொதுமக்கள் 100 சதவீதம் தங்களது வாக்கினை பதிவு செய்திடும் பொருட்டு, ஒவ்வொரு சட்டமன்ற தொகு திகளிலும் வாக்களர்களி டையே வாக்களிப்பதன் அவசியம் குறித்து, பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கை கள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

குறிப்பாக, இளம் வாக்காளர் களை ஊக்குவித்திடும் வகையில், கல்லூரி மாணவர்கள் கொண்டு பல்வேறு விழிப் புணர்வு நடவ டிக்கைகள் மாவட்டத்தின் அனைத்து சட்டமன்ற பகு திகளிலும் மேற்கொள்ளப் பட்டு வருகிறது. அந்தவகையில் சிவ கங்கை சட்டமன்ற தொகுதிக்குட் பட்ட கல்லூரியில் - விழிப்



புணர்வு ரங்கோலி - கோலப்போட்டி நடை பெற்றது. இப்போட்டியில், வாக்காளர் களிடையேவிழிப்புணர்வு ஏற்படுத்திடும் விழிப்புணர்வு ஏற்படுத்தியுள்ள பொருட்டு, கல்லூரி மாணவியர்கள் வண்ண ரங்கோலி கோலங்கள் இட்டு, விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர்.

இளம் வாக்காளர்க ளாகிய நீங்களும் தேர்தல் திருவிழாவில், ஆர்வத்துடன் பங்கேற்று வாக்களித்திடல் வேண்டும். வாக்களித்தல் என்பது தங்களது வாக்குரி மை மையை நிலைநாட்டுவதற்கு அடிப்படையான ஒன்றாகும். நமக்கான மக்கள் பிரதிநி தியை நாம் தேர்ந்தெடுப்ப தற்கும் அவை அடித்தளமாக அமைகிறது.

இந்திய தேர்தல் ஆணை யத்தின் உத்தரவிற்கிணங்க எந்த ஒரு வாக்காளர்களும் விடுபடாமல் வாக்களிப்ப தற்கு ஏதுவாக, வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தப்ப ணிகள் சிறப்பாக மேற் கொள்ளப்பட்டுள்ளது. cVIGIL என்ற செயலியின் வாயிலாகவும் அனைத்து வகையான புகார்களையும் தெரிவிப்பதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

குறிப்பாக, 85 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் எளிய முறையில் வாக்களிப் பதற்கு ஏதுவாக, படிவம் 12டி வாயிலாக வாக்களிப்பதற்கான நடவடிக்கை களும் தேர்தல் ஆணையத் தினால் ஏற்படுத்தப்பட் டுள்ளது. எனவே, நாம் அனைவரும் 100 சதவீதம் வாக்களித்து, தங்களது வாக்குரிமையை நிலைநாட்டிட வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வழங்கல் அலுவலர் பழனி குமார்,மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் துரை உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## ராஜபாளையம் தொகுதியில் தாமரை சின்னத்தில் போட்டி – ஜான் பாண்டியன் அறிவிப்பு

**ராஜபாளையம்,மார்ச்29:**
தமிழக சட்டசபை தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணியில் அங்கம் வகிக்கும் தமிழக மக்கள் முன்னேற்ற கழகத்திற்கு ராஜபாளையம் தொகுதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அத்தொகுதியில் வேட்பாளர் நிறுத்துவது குறித்து ஜான் பாண்டியன் ஆலோசித்து வந்தார்.

இந்த நிலையில், ராஜபாளையம் தொகுதியில் தமிழக மக்கள் முன்னேற்ற கழகம் தாமரை சின்னத்தில் போட்டியிட போவதாக ஜான் பாண்டியன் அறிவித்தார். இந்த தொகுதியில் ஜான் பாண்டியனின் மனைவி பிரிசில்லா பாண்டியன் போட்டியிட



வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது .ஜான் பாண்டியனின் இந்த முடிவால் தாமரை சின்னத்தில் போட்டியிடும் தொகுதிகளில் எண்ணிக்கை 33 ஆக உயர்ந்துள்ளது. பா.ஜ.க.வின் 27 தொகுதிகளில், த.மா.கா.விற்கு ஒதுக்கப்பட்ட 5 தொகுதிகளில், த.ம.மு.க.வின் ஒரு தொகுதி என 33 தொகுதிகளில் தாமரை சின்னம் போட்டியிடுகிறது.

## பெரம்பூர் பிரச்சாரம் விவகாரம்: தலைமைச் செயலகத்தில் தேர்தல் அதிகாரியிடம் விஜய் நேரில் புகார்

**சென்னை, மார்ச் 29:**
சென்னை தலைமைத் செயலகத்தில் தலைமை தேர்தல் அதிகாரியிடம் தவெக தலைவர் விஜய் புகார் மனு அளித்துள்ளார்.

பெரம்பூரில் பிரச்சாரம் செய்ய தவெக தலைவர் விஜய்க்கு அனுமதி மறுக்கப்பட்ட நிலையில், சென்னை தலைமை செயலகத்தில் இன்று தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக்கை நேரில் சந்தித்து விஜய் நேற்று மனு ஒன்றை அளித்தார்.

அந்த மனுவில், அதிகாரிகள் திமுகவுக்கு ஆதரவாக செயல்படுவதாக குற்றம் சாட்டியுள்ளார். மேலும்,



தலைமைச் செயலாளர், சென்னை காவல் ஆணையர், ஏடிஜிபி, நிதித்துறை செயலாளர் உள்ளிட்ட 10 அதிகாரிகளை மாற்ற வேண்டும் என்றும் அவர் அந்த மனுவில் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், பிரச்சாரம் செய்ய தனக்கு அனுமதி மறுக்கப்படுவதற்காக 10 காரணங்களையும் அவர் தனது மனுவில் பட்டியலிட்டுள்ளார்.

## கொளத்தூரில் மு.க.ஸ்டாலின், சேப்பாக்கத்தில்- உதயநிதி போட்டி: தி.மு.க. வேட்பாளர்கள் அறிவிப்பு

**சென்னை, மார்ச் 29:**
கொளத்தூரில் மு.க.ஸ்டாலின், சேப்பாக்கத்தில்- உதயநிதி போட்டி: தி.மு.க. வேட்பாளர்கள் அறிவிப்பு.

கன்னியாகுமரி- மகேஷ்
நாகர்கோவில்-எஸ்.ஆஸ்டின்
ராதாபுரம்- அப்பாவு
திருநெல்வேலி- சுப்பிரமணியன்
பாளையங்கோட்டை- அப்துல் வகாப்
ஆலங்குளம்- மனோஜ் பாண்டியன்
திருச்செந்தூர்-அனிதா ராதாகிருஷ்ணன்
தென்காசி- கலை கதிவரன்
வாசுதேவநல்லூர்- ராஜா
கோவில்பட்டி- கருணாநிதி
தூத்துக்குடி- கீதா ஜீவன்
விளாத்திகுளம்- மார்க்கேண்டயன்
முதுகுளத்தூர். ஆர்எஸ். கண்ணப்பன்





ராமநாதபுரம்- காதர் பாட்ஷா
போடி- ஓ.பன்னீர்செல்வம்
ஆண்டிப்பட்டி-மகாராஜன்
திருச்சுழி- தங்கம் தென்னரசு
அருப்புக்கோட்டை- கேகேஎஸ்எஸ்ஆர்
மதுரை மத்தி- பிடிஆர் பழனிவேல் தியாகராஜன்
ஒரத்தநாடு- வைத்தியலிங்கம்
மதுரை கிழக்கு- மூர்த்தி
குன்னம்- சிவசங்கர்
திட்டக்குடி-சி.வி.கணேசன்
திருவெறும்பூர்- அன்பில் மகேஷ் பொய்யாமொழி
திருச்சி மேற்கு- கே.என்.நேரு
கும்பகோணம்-சாக்கோட்டை அன்பழகன்
திருவிடைமருதூர்- கோவி. செழியன்
மன்னார்குடி-டி.ஆர்.பி.ராஜா
குறிஞ்சிப்பாடி-எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்
ஈரோடு மேற்கு - முத்துச்சாமி
ராசிபுரம்-மதிவேந்தன்
கோவை தெற்கு- செந்தில் பாலாஜி
சேலம் வடக்கு- ராஜேந்திரன்
ஆத்தூர்- ஐ.பெரியசாமி
ஒட்டன்சத்திரம்- சக்கரபாணி
நிலக்கோட்டை-நாகஜோதி
திண்டுக்கல்- ஐ.பி.செந்தில் குமார்
எடப்பாடி- காசி
ரிஷிவந்தியம்- வசந்தம் கார்த்திகேயன்
விழுப்புரம்- லட்சுமணன்
திருக்கோவிலூர்- கௌதம சிகாமணி
செஞ்சி- செஞ்சி மஸ்தான்
காட்பாடி- துரைமுருகன்
திருவண்ணாமலை- எ.வ.வேலு
அணைக்கட்டு- நந்தகுமார்
ராணிப்பேட்டை-வினோத் காந்தி
அம்பத்தூர்- டாக்டர் பூர்ணிமா
திருவள்ளூர்- ராஜேந்திரன்
ஆவடி- நாசர்
தாம்பரம்- கிருத்திகா
மயிலாப்பூர்- வேலு
சைதாப்பேட்டை- மா.சுப்பிரமணியன்
அண்ணாநகர்- சிற்றரசு
ஆயிரம் விளக்கு- எழிலன்
துறைமுகம்- சேகர்பாபு
ராயபுரம்- சுபேர்கான்
எழும்பூர்- தமிழன் பிரசன்னா
வில்லிவாக்கம்- கார்த்திக் மோகன்
சேப்பாக்கம்- திருவல்லிக் கேணி- உதயநிதி ஸ்டாலின்
கொளத்தூர்- மு.க.ஸ்டாலின்

தி.மு.க. வேட்பாளர்கள் அறிவிப்புக்கு பின் மு.க.ஸ்டாலின் கூறுகையில், கூட்டணியில் உள்ள அனைவரையும் திருப்திப்படுத்தி அனைவருக்கும் திருப்தி அளிக்கும் வகையில் தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. லேட்டா வந்தாலும் லேட்டஸ்டாக வேட்பாளர் பட்டியலை அறிவித்துள்ளோம்.

இன்று மாலை தி.மு.க. தேர்தல் அறிக்கை வெளியிடப்படும் என்றார்.

செக்யூரிட்டி கார்டுகள் தேவை
கோடம்பாக்கம் சேத்துப்பட்டு புரசைவாக்கம் கோட்டூர்புரம் பகுதிகளில் வேலை செய்ய செக்யூரிட்டி கார்டுகள் தேவை
அணுகவும்: 9840861539

ADVERTISE WITH US
CONTACT US
9438610756

WANTED:
FEMALE ANCHORS
• Age 18 to 35
• Good Looking
• Work from Home (Full-time/Part-time)
Salary: Rs. 20,000 to 50,000
Call / Whatsapp:
7789941009
9337501889

PLOT SALE
ORAGADAM 11L to 23L
TAMBARAM 51L to 69L
OMR 26L to 51L
ECR 52L to 75L
9626777627

Special Invitation
to retired seniors house wives businessmen bankers CAs NRIs age.30 to 70.qualification SSLC/graduate
To restart your second Innings with a career business opportunity
♦ Flexible timing unlimited incentive
♦ No target work from home training provided For successful business.
Contact Mr. Irudaya Raj
Ph.9486634780

Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com

keerthi foundation
De Addiction Cum Rehabilitation Centre
INTERNSHIP & JOB OPPORTUNITIES
MSW & M.Sc Psychology - Freshers
Internship:
Clinical Training
Counseling Practice
Case Work
Jobs:
Social Worker
Jr Psychologist
Rehab Counselor
Build Your Career in De-Addiction & Mental Health Care
Call: 9841945060 | 7845027710
www.keerthifoundation.com

WANTED
JAY SECURITY FORCE
பணி வாய்ப்புகள்
• பணிகள்: A.S.D செக்யூரிட்டி கார்டுகள் ஹவுஸ் கீப்பிங்
• இடங்கள்:
• பெருங்குடி, துரைப் பாக்கம்
• காரப்பாக்கம், சோழிங்கநல்லூர்
• விருகம்பாக்கம்
பெண்கள் தேவை
சம்பளம்:- 12500 முதல் 20000 வரை
9791061354 - 8072969599
Head office
NO :1, அம்பாள் அவின்யூ, வி.பி.ஜி அவின்யூ, விரிவாக்கம், மேட்டுக்குப்பம்- சென்னை-97

ஆட்கள் தேவை
வார சம்பளத்திற்கு
லேபர் வேலைக்கு ஆட்கள் தேவை
உணவு மற்றும் தங்கும் இடம் இலவசம்
OMR பெருங்குடி சென்னை
Contact
9790979539

PREMIUM LAND SALE NEAR PARANDUR AIRPORT
YOU ARE LUCKY!
Grab Your Future Investment Today!
Location: Just 6 KM Near Parandur New Airport
Price Details
₹700 to ₹2200 per Sq.Ft
Affordable & High Return Investment
Why Invest Here?
Fast Developing Area
Near Upcoming Airport
Excellent Appreciation Value
Suitable for Residential & Investment
Easy Road Access
PLOTS AVAILABLE NOW!
Contact: CT. Guruji
Phone: 90031 32847
LIMITED PLOTS - BOOK NOW!

WANTED
Site Supervisor required for construction work in Ambattur
Contact:
8428872887

WANTED
Needed female staff to look after children, patients.
Contact
9150989424

SEVEN STARS LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business
Our Services are ...
Freight Forwarding, International Courier, Customs Clearance, Cargo Movement by Air, Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town, Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com

just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary Unilevel Matrix Board Generation ROI / Investment
ONLY Rs. 499
Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com

SADHANA DEVI.K
CAR WASH
SUPREME
Car Wash & Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081.


WANTED
M/F லோடுமேன்,பிக்கர், டிரைவர், வர/மாத சம்பளம்: 450-700. உணவு இடம் free day/N8 shift
7540003588

அருள்தரும் தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
www.arultharumdeivam.com
அற்புதமான ஆன்மிக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..

WANTED
Retd, VRS, Home Makers, NRIs, Business Person
Contact
8248951872

# கவிதை அரங்கம்!





உன் அன்பின்
பிரகாசத்தை
உணர்ந்தேன்
நீ எனக்காக
சேகரித்து தந்த
மின்மினியில்

கலங்கித்தான்
போகின்றது
கண்களும்

உன்னை
காணமலிருந்து
காணும்போது

கொண்டு
சென்றுவிடு
உன் நினைவுகளை
என்னை
கொன்று திண்கிறது

# வாழ்க்கை தத்துவம்...



அன்பு காட்டுபவர்கள் அழகாக
இருக்கிறார்களா என்பது
அவசியம் இல்லை அவர்கள்
காட்டும் அன்பு அழகாக
இருக்கிறதா என்பதே அவசியம்

பலம் இருக்குன்னு
எதிரியையும்
பணம் இருக்குன்னு
செலவையும்
சம்பாதிக்க கூடாது

இந்த உலகம் உன்
முயற்சிகளை கவனிக்காது
முடிவுகளை தான் கவனிக்கும்
சிந்தித்து செயாப்படு

விளக்கம் அளிப்பது போன்று
நேரத்தை வீணடிக்கும் செயல்
வாழ்க்கையில் வேறு எதுவுமில்லை

# நிழல் நிஜமாகிறது

அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி. பிளஸ் டூ வகுப்பு. மாலை மணி 5:00. சிறப்பு வகுப்புகள் முடிந்து மாணவர்கள் கலைந்து கொண்டிருந்தனர். நம் கதையின் நாயகன் அன்பு, தன் நண்பர்களுடன் சைக்கிள் ஸ்டாண்டை நோக்கி நடந்தான்.

"டேய் அன்பு, நாளைக்கு கம்ப்யூட்டர் சயின்ஸ் பிராக்டிகல் எக்ஸாம்டா. ரெக்கார்டு நோட்டை வீட்லயே வச்சுட்டு வந்துடாத," என்றான் கதிர்.

"அதெல்லாம் மறக்கமாட்டேன்டா. ஆனா, அந்த லாஜிக் மட்டும் கொஞ்சம் குழப்பமா இருக்கு," என அன்பு யோசனையுடன் சொன்னான்.

"நீ கவலைப்படாத, நம்ம 'குரு' இருக்கான்ல," என ரகு சொல்ல, அனைவரும் சிரித்தனர். அந்த ஏரியாவின் புகழ்பெற்ற டீக்கடையில் வடை, டீ சாப்பிட்டுவிட்டு, அரட்டை அடித்துக்கொண்டே கலைந்தனர்.

அன்பு வீட்டிற்கு வந்தான். பழைய ஓட்டு வீடு என்றாலும், வீட்டைச் சுற்றி அவன் வளர்க்கும் செடிகள் அந்த இடத்தையே குளிர்ச்சியாக வைத்திருந்தன. குறிப்பாக, அவன் வளர்க்கும் 'நித்திய கல்யாணி' செடிகள் பூத்துக் குலுங்கின.

"அன்பு, வந்த உடனே புத்தகத்தை எடுக்காம எங்க போற?" என உள்ளே இருந்து அவன் அக்கா கவிதா குரல் கொடுத்தாள்.

"இருக்கா, செடிக்கு கொஞ்சம் தண்ணி ஊத்திட்டு வரேன்," என்றபடி தோட்டத்திற்குச் சென்றான். அவனுக்குத் தோட்டம் தான் நிம்மதி தரும் இடம்.

சிறிது நேரத்தில், "அன்பு, காபி போட்டு வச்சிருக்கேன், குடிச்சிட்டு படிக்க உட்காரு," என்றாள் அம்மா சரஸ்வதி.

அன்பு காபியை எடுத்துக்கொண்டு தன் அறைக்குச் சென்றான். ஜன்னல் ஓரம் அமர்ந்து வெளியே தெரிந்த நிலவையும், மரங்களின் நிழலையும் ரசித்தபடி காபியைப் பருகினான்.

திடீரென ஜன்னலுக்கு வெளியே ஏதோ ஒரு உருவம் நகர்வது போலத் தெரிந்தது. அன்பு திடுக்கிட்டான். உற்றுப் பார்த்தான், அங்கே கருப்பாக ஏதோ ஒன்று மெல்ல அசைந்தது.

"யார் அது?" என மெல்லிய குரலில் கேட்டான். பதில் இல்லை.

மீண்டும் ஒருமுறை பார்த்தபோது, அந்த உருவம் ஜன்னல் அருகே நெருங்கி வருவது தெரிந்தது. அவன் இதயம் படபடவெனத் துடித்தது. கையில் இருந்த காபி டம்ளர் நடுங்கியது.

"அம்மா... அக்கா..." என அலறினான் அன்பு. அலறல் சத்தம் கேட்டு சரஸ்வதியும், கவிதாவும் ஓடி வந்தனர். "என்னடா என்னாச்சு?" எனப் பதறினர்.

அன்பு ஜன்னலைக் காட்டி, "அங்கே... யாரோ நிக்கிறாங்க மா!" என்றான் பயத்தில்.

அம்மா ஜன்னல் வழியாக வெளியே பார்த்தார். பின் சிரித்துக்கொண்டே கவிதாவைப் பார்த்தார். "நீயே சொல்லு கவிதா, இவனுக்கு என்னன்னு," என்றார்.

கவிதா சிரிப்பை அடக்க முடியாமல், "டேய் பயந்தாங்கொள்ளி, அது திருடன் இல்லடா. நீ காலையில காயப்போட்ட உன்னோட கருப்பு சட்டை காத்துல ஆடிக்கிட்டு இருக்கு. அதுதான் ஜன்னல் கண்ணாடியில நிழலா தெரியுது," என்றாள்.

அன்பு மெல்ல ஜன்னல் அருகே சென்று பார்த்தான். ஆமாம், அவன் சட்டைதான் காற்றில் அசைந்து கொண்டிருக்க, நிலவொளியில் அது பயங்கர உருவமாகத் தெரிந்திருக்கிறது.

"நல்லா படிச்சு பெரிய ஆளாகப் போறான் என் தம்பி!" என கிண்டல் செய்தபடி அக்கா செல்லமாகத் தட்ட, அன்பு அசடு வழிந்தபடி புத்தகத்தை எடுத்தான்.



வெ.நாராயணன்
லால்குடி

# சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



*டன் கணக்கில் துணி துவைக்கும் இடம் எது.?*

*விடை: Washing (Ton) தான்.*

*குறைகக்கிற நாய் கடிக்காது ஏன் தெரியுமா.?*

*விடை: ஒரே சமயத்தில் இரண்டு வேலையை எப்படி செய்ய முடியும்.*



# தினம் ஒரு சமையல்



## ஹாட் சாக்லேட் கேக்

**தேவையான பொருட்கள்:**

| | |
|---|---|
| *1 கப்* | *-மைதா (240ml)* |
| *1 கப்* | *-சர்க்கரை பொடித்தது* |
| *2* | *-முட்டை* |
| *உப்பு* | *-ஒரு சிட்டிகை* |
| *1/4 கப்* | *-பால்* |
| *1 டேபிள் ஸ்பூன்* | *-பேக்கிங் பவுடர்* |
| *1/2 டேபிள் ஸ்பூன்* | *-பேக்கிங் சோடா* |
| *1/2 கப்* | *-எண்ணெய்* |
| *1/2 கப்* | *-கொக்கோ பவுடர்* |
| *சாக்லேட் சிரப்* | *-செய்வதற்கு* |
| *1/2கப். சர்க்கரை* | *-பொடித்தது* |
| *1/2 கப்* | *-கொக்கோ பவுடர்* |
| *1/2 கப்* | *-பால்* |
| *2 ஸ்பூன்* | *-பட்டர்* |



**செய்முறை:**

அடிகனமான பேனில் சிறிது எண்ணெய் தடவி முட்டை சேர்த்து நன்கு பீட் செய்யவும்.

முட்டையுடன் பொடித்த சர்க்கரை,மைதா, உப்பு,1/4 கப் பால், கொக்கோ பவுடர், பேக்கிங் பவுடர் பேக்கிங் சோடா 1/2 கப் எண்ணெய் சேர்த்து நன்கு கலந்து அடுப்பில் வைத்து மூடி போட்டு சிம்மில் 10 நிமிடம் வைக்கவும்

அடுப்பில் தோசை கல்லை வைத்து 5 நிமிடம் நன்றாக சூடான பின் கேக் பாத்திரத்தை தோசை கல் மீது வைத்து 5 நிமிடம் வேக வைக்கவும் மிதமான தீயில்.

ஒரு போர்க் வைத்து குத்தி பார்த்து எதுவும் ஒட்டாமல் இருந்தால் அடுப்பை அணைக்கவும்

சாக்லேட் சிரப் செய்வதற்கு பாத்திரத்தில் 2 ஸ்பூன் பட்டர், சர்க்கரை கொக்கோ பவுடர், பால் சேர்த்து நன்கு கலந்து சிறிது நேரம் அடுப்பில் வைக்கவும்.

சிரப் பதம் வந்ததும் இறக்கவும்

கேக் ஆறிய பின் ஒரு தட்டில் மாற்றி போர்க்கில் அங்கு அங்கு குத்தி விட்டு கேட்கின் மேல் சிறிது பாலை ஊற்றவும்

சாக்லேட் சிரப் கேட்கின் மேல் உற்றி, (பாதாம் பவுடர் தூவி,சாக்கோ சிப் சேர்த்து)சூடாக பரிமாறவும்

# வெட்பாலை பயன்கள்



பயணங்களின்போது, ஜன்னல் ஓரம் அமர்ந்து, இயற்கையை ரசித்து வருகிறோம். சாலையோரங்களில் பல மரங்கள், செடி, கொடி தாவரங்களைப் பார்க்கிறோம். இவற்றில், எவ்வித ஆர்ப்பாட்டமும் இல்லாமல் வெண்ணிறப் பட்டைகளுடன் வளர்ந்துள்ள வெட்பாலை மரங்களையும் நீங்கள் பார்த்திருக்கலாம்.

சரும நோய்களை விரட்டி அடிக்கும் வெட்பாலையை ஒரு மூலிகை ஹெர்குலஸ் என்று கம்பீரமாக அழைக்கலாம்! பாலை, நிலமாலை, வெப்பாலை, வற்சம், குடசம் ஆகிய வேறு பெயர்களைக் கொண்டது. வறண்ட நிலத்தில் வளரும் மரம் என்பதாலும், பாலைத் திணைக்குரிய மரம் என்பதாலும் வெட்'பாலை' என்ற பெயர் உருவானது.

வெட்பாலையின் இலைகளை கைகளில் வைத்து கசக்கிவிட்டு, சிறிது நேரம் கழித்துப் பாருங்கள். பசுமையான இலைகளில் கருநீல நிறம் படியும் நிற மாற்றத்தைப் பார்க்கலாம். செதில் செதிலாகத் தோல் உதிரும் காளாஞ்சகப்படை (சோரியாசிஸ்) எனும் சரும நோய்க்கு முதன்மையான மருந்து வெட்பாலை!

நரை முடியை மறைக்க, பக்கவிளைவுகளை உண்டாக்கும் செயற்கை சாயங்களுக்கு மாற்றாக, வெட்பாலை இலைகளில் இருந்து எடுக்கப்படும் இயற்கையான சத்தைப் பயன்படுத்தலாம்.

வெட்பாலை மரக்கட்டைகளைக் கொண்டு செய்யப்படும் மரபொம்மைகள் மிகவும் புகழ்பெற்றவை. நெகிழி பொம்மை களால் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு. அதற்கு மாற்றாக மருத்துவ குணமிக்க வெட்பாலை பொம்மைகளை மீண்டும் பிரபலப் படுத்துவோமா!

# சினிமா

## நடிகைகளை ரசியுங்கள், விமர்சிக்காதீர்கள்... தவறாக பேசியவர்களுக்கு பதிலடி கொடுத்த திஷா பதானி..



திஷா பதானி பாலிவுட்டில் மிகவும் பிரபலமான நடிகையாக இருப்பவர் திஷா பதானி. இவர் தமிழில் வெளிவந்த கங்குவா படத்தில் சூர்யாவுடன் இணைந்து நடித்திருந்தார். எனினும் இப்படம் எதிர்பார்த்த வெற்றியைப் பெறவில்லை.

நடிகை திஷா பதானி சமூக வலைத்தளத்தில் வெளியிடும் கிளாமர் புகைப்படங்கள் ரசிகர்கள் மத்தியில் வைரலாகும். படத்தின் மூலம் இவர் பிரபலமானதை விட, போட்டோஷூட் மூலம்தான் ரசிகர்களை அதிகம் கவர்ந்தார்.

சமீபத்தில் நிகழ்ச்சி ஒன்றில் நடிகை திஷா பதானி கலந்துகொண்டார். அந்த நிகழ்ச்சிக்காக அவர் அணிந்திருந்த ஆடை குறித்து நெட்டிசன்கள் பலரும் தவறான கருத்துக்களை தெரிவித்து வந்தனர். இந்நிலையில், தன்னுடைய ஆடை அலங்காரம் குறித்து வந்த தவறான விமர்சனங்களுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் பேசியுள்ளார்.

இதில், “நடிகைகளை ரசியுங்கள், ஆனால் அவர்கள் அணியும் உடைகளை விமர்சிக்காதீர்கள். கவர்ச்சிக்கும் ஆபாசத்துக்கும் இடையிலான வித்தியாசம் தெரியாமல் யாரும் திரையுலகிற்கு வரவில்லை” என தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.



நடிகை ஷத்திகா தற்போது ட்ரெண்டி உடையில் மொட்டை மாடியில் எடுத்து இருக்கும் லேட்டஸ்ட் போட்டோ ஷூட் ஸ்டில்களை பாருங்க.

## புதிய படத்திற்காக பல மடங்கு சம்பளத்தை உயர்த்திய நடிகர் சூரி... இத்தனை கோடியா?





காமெடியனாக கலக்கிக் கொண்டிருந்தவர் இப்போது ஹீரோவாக மிகவும் அழுத்தமான கதைகளாக தேர்வு செய்து நடித்தும் வருகிறார்.

கடைசியாக இவரது நடிப்பில் மாமன் என்ற திரைப்படம் வெளியாக படத்தை குடும்பம் குடும்பமாக மக்கள் திரையரங்கிற்கு வந்து பார்த்து படத்தை மிகப்பெரிய வெற்றியடைய வைத்தார்கள்.

காமெடியனாக பல படங்கள் நடித்துள்ள சூரி ஹீரோவாக களமிறங்கி கொட்டுக்காளி, விடுதலை, மாமன், ஏழு கடல் ஏழு மலை நடித்துள்ளார். தற்போது மண்டாடி என்ற படத்திலும் சூரி ஹீரோவாக நடித்து வருகிறார்.

அடுத்தடுத்து ஹீரோவுக்கான கதைக்களமாக தேடி நடித்துவரும் சூரி அடுத்து இன்று நேற்று நாளை மற்றும் அயலான் போன்ற வெற்றிப் படங்களை கொடுத்த ஆர்.ரவிக்குமார் இயக்கத்தில் புதிய படம் நடிக்க உள்ளார்.

இந்த படத்தை மைத்ரி மூவி மேக்கர்ஸ் நிறுவனம் தயாரிக்க உள்ளனர், இவர்கள் இதற்கு முன் அஜித்தின் குட் பேட் அக்லி, பிரதீப் ரங்கநாதனின் டியூட் ஆகிய படங்களை தயாரித்துள்ளனர்.

படத்தின் ஃபஸ்ட் லுக் சமீபத்தில் வெளியான நிலையில் இப்படத்திற்காக சூரி வாங்க உள்ள சம்பளம் குறித்த தகவல் தான் வெளியாகியுள்ளது. அதாவது சூரி இந்த புதிய படத்திற்காக ரூ. 25 கோடி சம்பளம் பேசப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது.

# கனவில் யானை வந்தால் அதிர்ஷ்டம் உங்கள் கதவைத் தட்டும்!

மனித வாழ்க்கையில் கனவுகள் ஒரு மர்மமான உலகம் போல இருக்கின்றன.
நாம் விழித்திருக்கும் போது நினைத்த விஷயங்களே சில நேரங்களில் கனவாக வருகிறது என்று அறிவியல் கூறினாலும், அதுவே எல்லா கனவுகளுக்கும் பொருந்தாது.
ஏனெனில்...
நாம் ஒருபோதும் நினைக்காத காட்சிகள்,
நாம் அறியாத இடங்கள்,
நாம் சந்திக்காத மனிதர்கள் என பல விசித்திரமான அனுபவங்கள் கனவுகளில் தோன்றுகின்றன.
அதனால் தான் பல ஆன்மீகவாதிகள் கூறுவது என்னவென்றால் —
சில கனவுகள் நம் எதிர்காலத்தை முன்கூட்டியே உணர்த்தும் சின்னங்களாக இருக்கலாம்.
அந்த வகையில்,
விலங்குகளில் மிகப் பெரியதும் வலிமையானதுமான யானையை கனவில் காண்பது மிகவும் முக்கியமான ஆன்மீக அறிகுறியாக கருதப்படுகிறது.
யானை என்பது சாதாரண விலங்கு அல்ல.
அது விநாயகப் பெருமானின் வடிவம் என்று பக்தர்கள் கருதுகின்றனர்.

மேலும் யானை தொடர்புடையவை:
மகாலக்ஷ்மி
இந்திரன்
அரசாட்சி
செல்வம்
செழிப்பு போன்றவை.
எனவே யானை கனவில் தோன்றுவது பெரும்பாலும் நல்ல சகுனம் எனக் கருதப்படுகிறது.
ஆனால் சில சமயங்களில் அது எச்சரிக்கையையும் தரக்கூடும்.

இப்போது யானை கனவில் வந்தால் என்னென்ன அர்த்தங்கள் இருக்கலாம் என்பதை விரிவாகப் பார்ப்போம்.

**1. கனவில் வெள்ளை யானையை கண்டால்**
வெள்ளை நிற யானை மிகவும் அபூர்வமானது.
இந்திரனின் வாகனமான ஐராவதம் வெள்ளை நிற யானையாகவே புராணங்களில் குறிப்பிடப்படுகிறது.
எனவே கனவில் வெள்ளை யானையை கண்டால்:
உங்கள் வாழ்க்கையில் உயர்ந்த நிலை கிடைக்கலாம்,
தலைமைப் பொறுப்பு அல்லது பதவி கிடைக்கலாம்,
நீண்ட காலமாக இருந்த பிரச்சனைகள் விரைவில் தீரலாம்.
வெள்ளை யானை அமைதி, ஆன்மீகம், தெய்வ அருள் ஆகியவற்றின் அடையாளமாக கருதப்படுகிறது.

**2. கனவில் கருப்பு யானையை கண்டால்**
பழங்காலத்தில் அரசர்களின் முக்கிய வாகனம் யானை.
ஒரு அரசன் வாரிசு இல்லாமல் இறந்துவிட்டால் புதிய அரசனை தேர்ந்தெடுக்க பட்டத்து யானை பயன்படுத்தப்பட்டதாக வரலாற்றில் கூறப்படுகிறது.
எனவே கனவில் கருப்பு யானை வந்தால்:
அரசாங்க வேலை வாய்ப்பு,
அரசு தொடர்பான ஒப்பந்தம்,
அதிகாரம் அல்லது பதவி போன்ற வாய்ப்புகள் வரக்கூடும் என்று கருதப்படுகிறது.

**3. கனவில் யானை மீது சவாரி செய்தால்**
நீங்கள் யானையின் மீது சவாரி செய்வதாக கனவு கண்டால்
அது மிகவும் நல்ல சகுனம்.
அதன் அர்த்தம்:




உங்கள் எதிரிகளை நீங்கள் வெல்வீர்கள்,
உங்கள் திறமை உலகிற்கு தெரியும், தலைமைத்துவம் பெறும் வாய்ப்பு வரும்
இது உங்கள் அறிவு மற்றும் தன்னம்பிக்கைக்கு கிடைக்கும் அங்கீகாரம் ஆகும்.

**4. கனவில் யானையை ஜோடியாக கண்டால்**
யானை தனது துணையுடன் கனவில் தோன்றினால்
அது பெரும்பாலும் திருமண அதிர்ஷ்டத்தை குறிக்கும்.
திருமணம் ஆகாதவர்களுக்கு விரைவில் நல்ல துணை கிடைக்கும் என்று கூறப்படுகிறது.

**யானைகள்:**
அன்பு, விசுவாசம், ஒற்றுமை என்பதன் அடையாளமாக இருப்பதால்
இந்த கனவு கணவன்-மனைவி உறவு உறுதியடையும் என்பதையும் குறிக்கிறது.

**5. கனவில் யானைக் கூட்டம் வந்தால்**
யானைகள் மிகவும் ஒற்றுமையுடன் வாழும் விலங்குகள்.அவை எப்போதும் கூட்டமாகவே பயணம் செய்யும்.
அதனால் கனவில் யானைக் கூட்டம் தோன்றினால்:
குடும்பத்தில் இருந்த சச்சரவுகள் முடியும்,
உறவினர்களுக்குள் ஒற்றுமை வரும்,
குடும்பம் அமைதியாகும் என்பதற்கான அறிகுறியாக கருதப்படுகிறது.

**6. கனவில் யானை ஆசி வழங்கினால்**
யானை தும்பிக்கையால் உங்களைத் தொடுவது அல்லது ஆசீர்வதிப்பது போல கனவு வந்தால்
அது மிகச் சிறந்த கனவாக கருதப்படுகிறது.
இதன் அர்த்தம்:
இறைவனின் அருள் உங்களுக்கு உள்ளது,
நீங்கள் தொடங்கும் காரியங்கள் வெற்றி பெறும்,
தடைப்பட்ட வேலைகள் நிறைவேறும்
இது விநாயகப் பெருமானின் அருள் கிடைக்கும் அறிகுறி என்றும் கூறப்படுகிறது.

**7. கனவில் யானை உங்களை துரத்தினால்**
யானை உங்களைத் துரத்துவது போல கனவு வந்தால்
அது ஒரு எச்சரிக்கை கனவு ஆக இருக்கலாம்.
அதன் அர்த்தம்:
ஒரு பெரிய பிரச்சனை உங்களை அணுகி வருகிறது; அதை சமாளிக்க நீங்கள் தயாராக வேண்டும்
இது நிஜ வாழ்க்கையில் பிரச்சனைகளை தவிர்க்காமல் துணிவுடன் எதிர்கொள்ள வேண்டும் என்பதைக் கூறுகிறது.

**8. கனவில் யானை தாக்கினால்**
யானை உங்களை தாக்குவது போல கனவு வந்தால்
அது சில சமயங்களில் கவனமாக இருக்க வேண்டிய அறிகுறி.
இதன் அர்த்தம்:
உடல்நலத்தில் சிறிய பிரச்சனைகள் வரலாம்,
உங்கள் வேலைகளில் தடைகள் தோன்றலாம்
எனவே இந்த கனவு வந்தால் நாம் முன்கூட்டியே கவனமாக இருப்பது நல்லது.

**9. கனவில் மெலிந்த யானையை கண்டால்**
மெலிந்த அல்லது பலவீனமான யானையை கனவில் காண்பது ஒரு எச்சரிக்கை அறிகுறி.
அதன் அர்த்தம்:
நீங்கள் சோம்பேறியாக இருக்கலாம்
உழைப்பை அதிகப்படுத்த வேண்டும்
மேலும் இது:
நிதி பற்றாக்குறை,
பொருளாதார சிக்கல் போன்றவற்றையும் உணர்த்தக்கூடும்.

**10. கனவில் யானை உங்கள் ஊருக்குள் வந்தால்**
யானைகள் செல்வம் மற்றும் செழிப்பின் அடையாளம்.
கனவில் யானை ஊருக்குள் வருவது போல தோன்றினால்:
நல்ல மழை பெய்யும்,
விளைச்சல் அதிகமாகும்,
அந்த இடம் செழிப்படையும் என்று பாரம்பரிய நம்பிக்கை கூறுகிறது.
கனவுகள் பற்றிய ஒரு பாரம்பரிய நம்பிக்கை பழமையான பாரம்பரியத்தில் ஒரு சுவாரசியமான கருத்து உள்ளது.

**பெரியோர்கள் கூறுவது:**
நல்ல கனவுகளை வெளியில் சொல்லாமல் வைத்தால் அது நிறைவேறும்.
கெட்ட கனவுகளை மற்றவர்களிடம் கூறிவிட்டால் அதன் தாக்கம் குறையும்.
ஆனால் இதை ஒரு முழுமையான விதியாக எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை.
ஏனெனில்...
கனவுகளின் பலன்கள் மிகவும் சுவாரசியமானவை என்றாலும்
அவை எல்லோருக்கும் ஒரே மாதிரி நடக்கும் என்று உறுதியாக கூற முடியாது.
எனினும், கனவுகள் நம் மனதின் ஆழத்தில் இருக்கும் உணர்வுகளையும் சில நேரங்களில் நம் வாழ்க்கையின் சின்னங்களையும் வெளிப்படுத்துகின்றன.



**ப.கோபிபச்சமுத்து**
புதுப்பேட்டை,
கிருஷ்ணகிரி - 1

## தினம் ஒரு தலைவர்கள்

# கி.த.பச்சையப்பன் வரலாறு

கி. த. பச்சையப்பன் (23 அக்டோபர், 1935 - 20 செப்டம்பர், 2018) புதுவையைச் சேர்ந்த தமிழ் உணர்வாளரும், மூத்த தமிழறிஞரும் ஆவார். தமிழாசிரியராக பணியாற்றிய இவர் தமிழாசிரியர் கழகத்தின் மாநிலப் பொறுப்பாளராகவும் நீண்ட காலம் செயல்பட்டார். இந்திய சுதந்திர போராட்டத்திலும், பிரெஞ்சிந்திய விடுதலைப் போராட்டத்திலும், இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலும் ஈடுபட்டவராவார். தமிழறிஞர், மொழிப் போராட்டத் தியாகி, ஈழத் தமிழ் உணர்வாளர், சென்னை ஆசிரியர் சங்கம், தமிழகத் தமிழாசிரியர் கழகம் மற்றும் தமிழ் உரிமைக் கூட்டமைப்பின் தலைவர் என தமிழுக்காக தன் வாழ்க்கையை தகவமைத்துக் கொண்ட புலவர் பச்சையப்பன், பல்வேறு போராட்டங்களில் பங்கு கொண்டு சுமார் 70 ஆண்டுகள் பொதுவாழ்க்கைக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். தனித்தமிழைப் பாதுகாக்கும் பல்வேறு கருத்தரங்குகள், கூட்டங்கள், உரையரங்கங்கள் நடத்தியும் பங்கேற்றும் தமிழ்மொழியின் உயர்விற்காகவும் பாடுபட்டவர்.

**பிறப்பும் இளமைக்காலமும்**
1935 ஆம் ஆண்டு புதுச்சேரி குயவர்பாளையத்தில் கி.தங்கவேல், தனம் அம்மாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார். பள்ளிப் படிப்பை முடிக்கும் காலத்தில், பிரெஞ்சு ஆதிக்கத்திலிருந்த புதுச்சேரியின் விடுதலைக்கான இயக்கத்தில் சேர்ந்தார். இதனால் அவரின் பள்ளி இறுதி வகுப்பு தடைப்பட்டது. தமிழகத்தின் சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் புலவர் படிப்பில் சேர்ந்தார். பிரெஞ்சிந்திய விடுதலைப் போராட்ட ஈடுபாடு காரணமாக இங்கும் படிப்பு தடைப்பட்டது. இவர் 1954 ஏப்ரல் 13ஆம் தேதி இந்திய தேசியக் கொடியை ஏற்றியதால், பிரெஞ்சு காவல்துறையால் தாக்கப்பட்டார். அதையொட்டி தமிழகப் பகுதியில் ஆறு மாதங்களுக்கும் மேல் தலைமறைவாக இருந்தார். பின்னர், திண்டிவனத்தை அடுத்த மயிலத்தில் தமிழ் வித்துவான் படிப்பை முடித்தார்.



**ஆசிரியப் பணி**
சென்னையில் பள்ளி ஆசிரியராகப் பணியைத் தொடங்கிய பச்சையப்பன், சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் அரசுப் பள்ளிகளில் தமிழாசிரியராகப் பணியாற்றி மேனிலைப்பள்ளித் தலைமையாசிரியராக ஓய்வுபெற்றார். தமிழ் உரிமைக் கூட்டமைப்பின் தலைவராகவும், தமிழகத் தமிழாசிரியர் கழகத்தின் மாநிலப் பொறுப்பாளராகவும் நீண்ட காலம் செயல்பட்டார்.

**ஊடகவியல் பணி**
அன்றாடச் செய்தியில் தனித்தமிழ்ச் சொற்களைப் பயன்பாட்டுக்குக் கொண்டுவந்ததில், புலவர் கி. த. பச்சையப்பனுக்கு முக்கிய பங்கு உண்டு. பத்திரிகை உலகில் குறிப்பிடத்தக்கபடியாக, ‘தமிழ் ஓசை’ நாளேட்டில் மொழிநடை ஆசிரியராக பணிபுரிந்த இவர், மக்கள் தொலைக்காட்சியில் பயன்படுத்தப்படும் தனித்தமிழ்ச் சொற்களை கொண்டு வந்த முயற்சியில் முக்கிய பங்கு வகித்தார். இதனையடுத்தே பெரும்பாலான நவீன ஆங்கிலச் சொற்களுக்கு தமிழ் வார்த்தைகளும் புழக்கத்தில் வந்தன. அதன் தாக்கத்தில் இன்றைய 24 மணி நேரத் தொலைக்காட்சிகளில் தனித்தமிழ்ச் சொற்கள் புழக்கத்துக்கு வந்தன.

**தமிழ் பணிகள்**
பச்சையப்பனார் சென்னை அரசுப் பள்ளிகளில் தமிழாசிரியராகவும், தலைமை ஆசிரியராகவும் பணியாற்றினார். தமிழ் உரிமைக் கூட்டமைப்பின் தலைவராகவும், தமிழகத் தமிழாசிரியர் கழகத்தின் தலைவராகவும் நீண்ட காலம் செயல்பட்டார். ஊடகம் மற்றும் அச்சு துறையில் ஆங்கிலம் மற்றும் இந்தி ஆதிக்கம் இருந்த போது தமிழ் மொழியையும் டிஜிட்டல் யுகத்துக்கு கொண்டு வந்தார். தமிழைச் செம்மொழியாக அறிவிக்குமாறு டெல்லிக்கும் சென்று முழக்கமிட்டார். தமிழ்த் தாத்தா உ. வே. சா வாழ்ந்த சென்னை இல்லத்தை நினைவிடமாக்க வேண்டும் என முதல்வர் பழனிசாமியிடம் வேண்டுகோள் விடுத்தார்.

**போராட்ட வாழ்வு**
பிரெஞ்சிந்திய விடுதலைப்போராட்டத்தின் போது புதுச்சேரி இந்தியாவுடன் இணைய வேண்டும் என்று முழக்கமிட்ட இவர் ஈழத் தமிழர்களுக்காகவும் தொடர்ந்து குரல் கொடுத்து வந்தார். 1999-ல் தமிழ்வழிக் கல்விக்காக நூறு தமிழறிஞர்கள் கலந்துகொண்ட சாகும்வரை உண்ணாவிரதத்தில் முன்னிலையாகப் பங்கேற்றார். பின்னர், அப்போதைய தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் தமிழ்க்குடிமகன் அழைத்துப் பேசி, அந்த உண்ணாவிரதம் நிறுத்தப்பட்டது. அந்தப் பேச்சுவார்த்தையில் இவர் முக்கியமாகப் பங்கேற்றார். பின்னர், சக தமிழறிஞர்களுடன் திரளாக டெல்லிக்குச் சென்று செம்மொழியாக தமிழை அறிவிக்குமாறு கோரி 2002 காலகட்டத்தில் போராட்டம் நடத்தினார்.

# ஓட்டுநர் உரிமம் புதுப்பித்தல்: 30 நாள் சலுகைக் காலம் பரிந்துரை!




**புதுடெல்லி, மார்ச் 29:**

ஓட்டுநர் உரிமம் காலாவதியான பிறகு, 30 நாட்கள் சலுகைக் காலம் வழங்கும் வகையில் மோட்டார் வாகனச் சட்டத்தில் திருத்தம் செய்ய மத்திய அரசு பரிந்துரைத்துள்ளது. இந்தக் காலத்தில் உரிமம் தொடர்ந்து செல்லுபடியாகும்.

இது வர்த்தகம் மற்றும் தொழில்துறை இணை அமைச்சர் ஜிதின் பிரசாதாவால் மக்களவையில் அறிமுகப்படுத்தப்பட்ட ஜன் விஸ்வாஸ் (Jan Vishwas) மசோதாவின் ஒரு பகுதியாகும்.

வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளரின் கூற்றுப்படி, மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் சில இணக்கங்களுக்குத் தளர்வு அளிக்கவும், சட்டரீதியான 20 திருத்தங்கள் முன்மொழியப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட அதிகார வரம்பிற்குப் பதிலாக மாநிலம் முழுவதும் வாகனப் பதிவை அனுமதிப்பது, மற்றும் ஓட்டுநர் உரிமம் காலாவதியான பிறகு விண்ணப்பிக்கும் பட்சத்தில், காலாவதியான தேதியிலிருந்து அல்லாமல், விண்ணப்பித்த தேதியிலிருந்தே புதுப்பிக்க அனுமதிப்பது உள்ளிட்டவை இதில் அடங்கும்.

உரிமம் காலாவதியான பிறகு முப்பது நாட்கள் சலுகைக் காலம் வழங்கவும் முன்மொழிந்துள்ளது.

# 10-ம் வகுப்பு தேர்வில் பெரிய மாற்றம்: மொத்த மதிப்பெண் 525 ஆக குறைப்பு

**பெங்களூரு, மார்ச் 29:**

கர்நாடகா மாநிலத்தில் எஸ்எஸ்எல்சி(10-ம் வகுப்பு) தேர்வில் முக்கிய மாற்றங்களை அரசு அறிவித்துள்ளது. பள்ளிக் கல்வி மற்றும் எழுத்தறிவு துறை அமைச்சர் மது பங்காரப்பா செய்தியாளர் சந்திப்பில் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

அதன்படி, 10-ம் வகுப்பு தேர்வின் மொத்த மதிப்பெண் 625 இலிருந்து 525 ஆக குறைக்கப்படுகிறது. இதுவரை மூன்றாம் மொழி பாடத்திற்கு வழங்கப்பட்ட 100 மதிப்பெண்கள் இனி மொத்த மதிப்பெண் கணக்கில் சேர்க்கப்படாது.

மேலும், மூன்றாம் மொழி பாடங்களுக்கு இனி 'மதிப்பெண்' முறைக்கு பதிலாக 'கிரேடு' (A, B, C, D) முறை மட்டும் பின்பற்றப்படும். இந்த மாற்றம் இந்தி, சமஸ்கிருதம், துளு, மராத்தி, அரபி, தெலுங்கு உள்ளிட்ட அனைத்து மூன்றாம் மொழிகளுக்கும் பொருந்தும். இந்த புதிய நடைமுறை 2026 10-ம் வகுப்பு தேர்விலிருந்து அமலுக்கு வரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சிபிஎஸ்சி, ஐசிஎஸ்இ பாடத்திட்டங்களில் பயிலும் மாணவர்களுக்கு இந்த மாற்றம் பொருந்தாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்களின் தேர்வு அழுத்தத்தை குறைத்து, முழுமையான கல்வி வளர்ச்சியை ஊக்குவிப்பதே இந்த மாற்றத்தின் நோக்கம் என அரசு தெரிவித்துள்ளது.

# 2026 நிதி மசோதாவிற்கு மாநிலங்களவை ஒப்புதல்

**புதுடெல்லி, மார்ச் 29:**



2026-27ம் நிதியாண்டுக்கான நிதி மசோதா மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டு, அதன் மீது விவாதம் நடத்தப்பட்டது. இதில் அரசின் 32 திருத்தங்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டன. பின்னர் அந்த திருத்தங்களுடன் நிதி மசோதா மக்களவையில் கடந்த 25-ந்தேதி நிறைவேறியது.

தொடர்ந்து மத்திய நிதி மசோதா மாநிலங்களவை பரிசீலனைக்காக அனுப்பப்பட்டது. இதன்படி மாநிலங்களவையில் இன்று நிதி மசோதா குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டது. தொடர்ந்து 2026 நிதி மசோதாவிற்கு மாநிலங்களவை ஒப்புதல் அளித்தது. இதன் மூலம், ஏப்ரல் 1-ந்தேதி முதல் தொடங்கும் அடுத்த நிதியாண்டிற்கான வரவு செலவு திட்டப் பணிகள் நிறைவடைந்துள்ளன.

மத்திய நிதி மசோதாவில், 2026-27ம் நிதியாண்டிற்கான மொத்த செலவினம் ரூ.53.47 லட்சம் கோடியாக இருக்கும் என்று கூறப்பட்டுள்ளது. இது, வரும் மார்ச் 31-ந்தேதியோடு முடிவடையும் நடப்பு நிதியாண்டை விட 7.7 சதவீதம் அதிகமாகும்.

அதே போல், மத்திய நிதி மசோதாவில், அடுத்த நிதியாண்டிற்கான மொத்த மூலதனச் செலவு ரூ.12.2 லட்சம் கோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும், அடுத்த நிதியாண்டில் மொத்த வரி வருவாய் வசூல் ரூ.44.04 லட்சம் கோடியாகவும், கடனாக வாங்கும் தொகை ரூ.17.2 லட்சம் கோடியாக இருக்கும் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது.

2027-ம் நிதியாண்டிற்கான நிதிப் பற்றாக்குறை, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.3 சதவீதமாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இது நடப்பு நிதியாண்டில் இருந்த 4.4 சதவீதத்தை விட குறைவாகும்.

# 'ஊரடங்கு அமல்படுத்தும் திட்டம் எதுவும் இல்லை' – நிர்மலா சீதாராமன்

**புதுடெல்லி, மார்ச் 29:**



மத்திய கிழக்கில் நிலவி வரும் போர் சூழலுக்கு இடையில், ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளது. அந்த வழியாக அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் அதன் நட்பு நாடுகளின் கப்பல்கள் கடந்து செல்வதற்கு ஈரான் அனுமதி மறுத்து உள்ளது. இதனால் சர்வதேச அளவில் வணிக கப்பல் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

இதன் விளைவாக இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் சமையல் எரிவாயு தட்டுப்பாடு ஏற்படும் சூழல் உருவாகியுள்ளது. இந்த சூழ்நிலையை எதிர்கொள்ளும் வகையில் வணிக சிலிண்டர் விநியோகத்திற்கு மத்திய அரசு பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. மேலும் எண்ணெய் சந்தைப்படுத்தும் நிறுவனங்கள் பெட்ரோல் விலையை உயர்த்தாமல் இருப்பதை உறுதி செய்வதற்காக, மத்திய அரசு பெட்ரோல் மற்றும் டீசல் மீதான கலால் வரியை தலா ரூ.10 குறைத்துள்ளது. இதற்கிடையில், எரிபொருள் தட்டுப்பாடு உள்ளிட்ட காரணங்களுக்காக இந்தியாவில் மீண்டும் கொரோனா காலத்தைப் போன்ற ஊரடங்கு அமல்படுத்தப்பட உள்ளதாக தகவல் பரவி வருகிறது. இதனை மத்திய அரசு மறுத்துள்ளது.

இது குறித்து மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு துறை மந்திரி ஹர்தீப் சிங் பூரி வெளியிட்ட 'எக்ஸ்' பதிவில், "இந்தியாவில் ஊரடங்கு அமல்படுத்தப்பட உள்ளதாக பரவும் வதந்திகள் முற்றிலும் உண்மைக்கு மாறானவை. அத்தகைய எந்த ஒரு திட்டமும் இந்திய அரசிடம் இல்லை" என்று தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், மாநிலங்களவையில் இன்று நிதி மசோதா 2026 மீதான விவாதத்தின்போது மத்திய நிதி மந்திரி நிர்மலா சீதாராமன் பேசுகையில், "பல நாடுகள் மோட்டார் எரிபொருள் விலையை 20 முதல் 50 சதவீதம் வரை உயர்த்தியுள்ள நிலையில், இந்திய அரசு பெட்ரோல் மற்றும் டீசல் விலைகளை மாற்றாமல் வைத்துள்ளது என்று தெரிவித்தார்.

# காலியாக உள்ள நீதிபதி பணியிடங்களை விரைந்து நிரப்ப தலைமை நீதிபதி அறிவுறுத்தல்

**புதுடெல்லி, மார்ச் 29:**


டில்லி வட்டாரத் தகவல்கள் கூறியதாவது: 25 உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதிகளுக்கு உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி சூர்ய காந்த் கடந்த வாரம் கடிதம் எழுதினார். அந்தக் கடிதத்தில் உயர்நீதிமன்றங்களில் நீதிபதி பணியிடங்கள் காலியாக இருப்பதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார். மேலும், அமர்வுகளில் பெண் நீதிபதிகள் எண்ணிக்கையை அதிகரிக்கும்படியும் வலியுறுத்தியுள்ளார்.

கொலீஜியத்தின் பரிந்துரைகளை தாமதிக்க வேண்டாம் எனவும், புதிதாக காலியிடம் உருவாகும் முன்பு ஏற்கெனவே இருக்கும் காலியிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகளை எடுக்கும்படியும் சூர்ய காந்த் அறிவுறுத்தியுள்ளார் எனத் தெரிவித்தன. முன்னதாக, உயர்நீதிமன்றங்களில் காலியாக உள்ள நீதிபதிகளின் எண்ணிக்கை குறித்த தரவை மக்களவையில் அண்மையில் மத்திய சட்டத் துறை அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் தாக்கல் செய்தார். அதில், உயர்நீதிமன்றங்களில் 1,122 நீதிபதி பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டு இருப்பதாகவும், அவற்றில் 308 பணியிடங்கள் காலியாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதேபோல், 2014-ஆம் ஆண்டுமுதல் உயர்நீதிமன்றங்களில் 170 பெண் நீதிபதிகள் நியமிக்கப்பட்டு இருப்பதாகவும், அவர்களில் 96 பேர் கடந்த 5 ஆண்டுகளில் நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

# 4 அங்குல அதிசயம்: சாக்பீஸில் ராமர் கோவிலை செதுக்கிய ஒடிசா கலைஞர்

**புவனேஸ்வர், மார்ச் 29:**

ஒடிசா மாநிலத்தின் குர்தா மாவட்டத்தில் உள்ள கோபிநாத்பூர் அருகே உள்ள ஹட்பஜாரை சேர்ந்த எல். ஈஸ்வர் ராவ் என்பவர் வசித்து வருகிறார். இவர் ஒரு மினியேச்சர் கலைஞர். பல ஆண்டுகால அனுபவம் கொண்ட ஒரு சிறந்த நுண்கலை கலைஞர். ஒவ்வொரு ஆண்டும் பண்டிகைகளின் போது ஏதாவது ஒரு புதுமையை செய்வது அவரது வழக்கம்.



இந்த நிலையில் ராம நவமி இன்று நாடு முழுவதும் கொண்டாடப்படுவதையொட்டி, அயோத்தி ராமர் கோவிலை மையமாக வைத்து ஒரு படைப்பை உருவாக்க அவர் திட்டமிட்டார். அதன்படி இந்த ஆண்டு ராம நவமியை முன்னிட்டு சாக்பீஸை பயன்படுத்தி அயோத்தி ராமர் கோவிலின் ஒரு விரிவான மினியேச்சர் மாதிரியை உருவாக்கி அசத்தி உள்ளார். இந்த தனித்துவமான படைப்பின் மூலம் அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளார் அவர்.

சுமார் 7 நாட்கள் இரவு பகலாக உழைத்து, வெறும் 4 அங்குல உயரமும், 4 அங்குல நீளமும் கொண்ட மிகச்சிறிய ராமர் கோயில் மாதிரியை தத்ரூபமாக செதுக்கி உள்ளார். இதில் கோவிலின் கோபுரங்கள், தூண்கள் மற்றும் நுணுக்கமான வேலைப்பாடுகள் அப்படியே தத்ரூபமாகப் பிரதிபலிக்கின்றன.

இந்த சிறிய படைப்பின் மூலம் ராமநவமி திருவிழாவிற்கு எனது வாழ்த்துகளையும், அமைதி மற்றும் பக்தியின் செய்தியையும் மக்களிடம் கொண்டு சேர்க்க விரும்புகிறேன்" என்கிறார் ஈஸ்வர் ராவ்.

# ரூ.2.38 லட்சம் கோடிக்கு பாதுகாப்புத் தளவாடங்கள் கொள்முதல்: மத்திய அரசு ஒப்புதல்

**புதுடெல்லி, மார்ச் 29:**

எஸ்.400 வான் பாதுகாப்பு சாதனம், 60 ராணுவ போக்குவரத்து விமானம் உள்பட ரூ.2.38 லட்சம் கோடிக்கு பாதுகாப்புத் தளவாடங்களைக் கொள்முதல் செய்வதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

டில்லியில் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தலைமையில் பாதுகாப்புத் தளவாடக் கொள்முதல் கவுன்சில் (டிஏசி) கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஆயுத தளவாடக் கொள்முதல் தொடர்பாக விவாதிக்கப்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்டது. இதுகுறித்து பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்ட அறிவிப்பில், 'இந்திய விமானப் படைக்காக நடுத்தர போக்குவரத்து விமானம் வாங்கும் திட்டம், ரஷியாவிடம் இருந்து எஸ்.400 நீண்ட தூர வான் பாதுகாப்பு ஏவுகணை அமைப்பு, ஆளில்லா தாக்குதல் விமானம், சுகோய் 30 விமான என்ஜின் பராமரிப்பு தொடர்பான திட்டங்களுக்கு டிஏசி ஒப்புதல் வழங்கியது. தற்போது பயன்பாட்டில் உள்ள சோவியத் யூனியன் கால ஏஎன் 32, ஐஎல் 76 போக்குவரத்து விமானங்களுக்கு பதிலாக நடுத்தர போக்குவரத்து விமானங்களை இந்திய விமானப் படையில் சேர்க்கும் திட்டத்துக்கு ஒப்புதல் தரப்பட்டது' எனக் கூறப்பட்டுள்ளது.

அதேநேரத்தில் எத்தனை எஸ்.400 வான் பாதுகாப்பு சாதனங்கள் கொள்முதல் செய்யப்பட இருக்கிறது, எத்தனை ராணுவ போக்குவரத்து விமானங்கள் வாங்கப்பட இருக்கிறது என்ற தகவல் பாதுகாப்பு அமைச்சக அறிவிப்பில் இல்லை. ஆனால் இதுகுறித்து அதிகாரிகள் கூறுகையில், '5 எஸ்.400 சாதனங்களும், 60 ராணுவ போக்குவரத்து விமானங்களும் வாங்கப்பட உள்ளன. முதலில் 12 விமானம் நேரடியாக வாங்கவும், எஞ்சிய 48 விமானங்களை இந்தியாவில் தயாரிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது' என்றனர்.

லாக்ஹீட் மார்ட்டின் நிறுவனம், ஏர் பஸ் நிறுவனம் உள்ளிட்ட ஏதேனும் ஒரு நிறுவனத்திடம் இருந்து 60 விமானங்கள் வாங்கப்படலாம் என கூறப்படுகிறது.

ரஷிய, அமெரிக்க நிறுவனங்களுடன் ஒப்பந்தம்: பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்ட இன்னொரு அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இந்திய ராணுவத்துக்காக துன்சுகா வான் பாதுகாப்பு ஏவுகணை அமைப்பு ரஷியாவின் ஜேஎஸ்சி ரோசோபோரன்எக்ஸ்போர்ட் நிறுவனத்திடம் இருந்து கொள்முதல் செய்யப்பட இருக்கிறது. இதுதொடர்பாக ரூ.445 கோடி மதிப்பிலான ஒப்பந்தத்தை அந்நிறுவனத்துடன் பாதுகாப்பு அமைச்சகம் செய்துள்ளது. இந்த வான் பாதுகாப்பு ஏவுகணை அமைப்பு, ட்ரோன்கள், க்ரூஸ் ரக ஏவுகணைகளால் இந்திய வான் பகுதிக்கு ஏற்படும் அச்சுறுத்தல்களை எளிதில் சமாளிக்க உதவும். இந்த ஒப்பந்தம் மூலம் இந்தியா-ரஷியா இடையேயான பாதுகாப்பு ரீதியான ஒத்துழைப்பு மேலும் வலுப்படும்.

# 'பெட்ரோல், டீசல் மீதான கலால் வரி குறைப்பு: டி.கே.சிவக்குமார் விமர்சனம்

**பெங்களூரு, மார்ச் 29:**

மத்திய கிழக்கு நாடுகளில் போர் நடைபெற்று வருவதால் பெட்ரோல்-டீசல், சமையல் கியாஸ் விலை உயர்ந்து வருகிறது. சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயர்ந்தாலும் இந்தியாவில் எண்ணெய் நிறுவனங்கள் பெட்ரோலிய பொருட்களின் விலையை உயர்த்தவில்லை.

இந்த நிலையில் பெட்ரோல்-டீசல் மீதான சுங்க வரி லிட்டருக்கு ரூ.10 குறைத்து மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. ஆனால் பெட்ரோல்-டீசல் விலையில் எந்த மாற்றமும் இல்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து துணை முதல்-மந்திரி டி.கே.சிவக்குமார் பெங்களூருவில் நேற்று நிருபர்களுக்கு பேட்டி அளிக்கையில் கூறியதாவது:-

மத்திய அரசு நம்மை கொலை செய்கிறது. தேர்தல் நேரத்தில் சுங்க வரியை குறைத்துள்ளனர். தேர்தலை மனதில் வைத்து மத்திய அரசு இந்த விலை குறைப்பை செய்துள்ளது. நயாரா நிறுவனம் ஏற்கனவே பெட்ரோல்-டீசல் விலையை உயர்த்திவிட்டது. இதுகுறித்து நாங்கள் மக்களிடம் கொண்டு செல்வோம். கர்நாடகத்தில் அவற்றின் மீதான வரியை குறைப்பது குறித்து பின்னர் பேசுகிறோம்..

# ராகுலை பழிக்கும் கேரள முதல்வர் பிரதமரை விமர்சிக்காதது ஏன்? காங்கிரஸ் கேள்வி

**திருவனந்தபுரம், மார்ச் 29:**

கேரள சட்டப்பேரவைத் தேர்தல் ஏப்ரல் 9-ஆம் தேதி நடைபெறவுள்ள நிலையில், அங்கு ஆளும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தலைமையிலான இடதுசாரி ஜனநாயக முன்னணிக்கும், காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணிக்கும் இடையே கடும் போட்டி நிலவி வருகிறது. இது தவிர பாஜகவும் களத்தில் உள்ளது.

காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி அண்மையில் பேசுகையில், 'பினராயி விஜயனுக்கு எதிராக பல ஊழல் வழக்குகள் நிலுவையில் உள்ளன. ஆனால், அவருக்கு எதிராக மத்திய விசாரணை அமைப்புகள் நடவடிக்கை எடுக்கவில்லை. பாஜக-மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தொடர்புக்கு இதுவே ஆதாரம்' என்றார். இதைக் கடுமையாக விமர்சித்த பினராயி விஜயன், 'காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி பாஜகவுடன் ரகசிய கூட்டணியில் உள்ளார்; இத்தனை ஆண்டு அரசியலில் இருந்து அவர் எதையும் கற்றுக் கொள்ளவில்லை' என்றார். இதனால், இரு கட்சிகள் இடையே கடுமையான வார்த்தைப் போர் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், வயநாட்டில் செய்தியாளர்களைச் சந்தித்த கே.சி.வேணுகோபால், 'கடந்த இரு நாள்களாக ராகுல் காந்தியை பினராயி விஜயன் கடுமையாக விமர்சித்துப் பேசியுள்ளார். இதற்கு கேரளத்தில் ராகுல் காந்திக்கு உள்ள செல்வாக்குதான் காரணம். ராகுலைப் பார்த்து கேரள முதல்வர் அஞ்சுகிறார்.

அதேநேரத்தில், பிரதமர் மோடியை ஒரு வார்த்தைகூட விமர்சிக்கவில்லை. ஏனெனில் பி.எம். ஸ்ரீ பள்ளிகள், தொழிலாளர் சட்டங்கள் குறித்து மத்திய அரசுடன் அவர் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளார். மத்திய அரசிடம் இருந்து மாநிலத்துக்குத் தேவையான நிதியைப் பெற தமிழக முதல்வர் தொடர்ந்து உறுதியான கோரிக்கைகளை முன்வைக்கிறார். ஆனால், கேரள முதல்வர் ராகுலை மட்டுமே குறிவைக்கிறார் என்றார்.

# தெலங்கானாவில் தெருநாய் தாக்கியதில் கண்ணை இழந்த 4 வயது சிறுவன்!

**புவனகிரி, மார்ச் 29:**

தெலங்கானா மாநிலம், புவனகிரி நகரில் உள்ள தனது வீட்டிற்கு வெளியே அந்த சிறுவன் வியாழக்கிழமை விளையாடிக் கொண்டிருந்தான். அப்போது தெருநாய் தாக்கியதில் சிறுவனின் ஒரு கண் கருவிழி பெயர்ந்து தரையில் விழுந்தது. உடனே அச்சிறுவன் ஹைதராபாத்தில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டான். தற்போது சிறுவன் நலமுடன் இருப்பதாகவும், அவனது மற்றொரு கண் பாதிக்கப்படவில்லை என்றும் காவல் துறை தெரிவித்துள்ளது. இதுபோன்ற சம்பவங்களைத் தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட ஆட்சியர் மற்றும் பிற அதிகாரிகளுக்கு காங்கிரஸ் எம்.பி. கிரண் குமார் ரெட்டி உத்தரவிட்டார். சிறுவனின் தந்தையிடமும் பேசி, சிகிச்சைக்கான செலவை அரசு ஏற்கும் என்று உறுதியளித்தார். சிறுவன் ஹைதராபாத்தில் உள்ள இரண்டு தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகிறான் என்று கிரண் குமார் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவித்தார். தெருநாய்களின் தொல்லையைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நகராட்சி அதிகாரிகளையும் அவர் கேட்டுக்கொண்டார்.

# சந்திரசேகர் ராவ் மகள் கவிதா ஏப்.25-ல் புதிய கட்சி தொடக்கம்!

**ஐதராபாத், மார்ச் 29:**

தெலங்கானா முன்னாள் முதல்வர் சந்திரசேகர் ராவின் மகள் கவிதா வரும் ஏப்ரல் 25 அன்று புதிய கட்சியைத் தொடங்குவதாகத் தெரிவித்துள்ளார்.

தெலங்கானா முன்னாள் முதல்வரும், பாரதிய ராஷ்டிரிய சமிதி (பி.ஆர்.எஸ்.) கட்சியின் தலைவருமான சந்திரசேகர் ராவின் மகள் கவிதா கடந்த 2025 ஆம் ஆண்டு அக்கட்சியில் இடைநீக்கம் செய்யப்பட்டார். இதனைத் தொடர்ந்து, பி.ஆர்.எஸ். கட்சியில் இருந்து விலகிய கவிதா விரைவில் புதிய கட்சியைத் தொடங்குவேன் என கடந்த பிப்ரவரி மாதம் அறிவித்திருந்தார். இந்த நிலையில், வெள்ளிக்கிழமை (மார்ச் 27) நடைபெற்ற செய்தியாளர்களுடனான சந்திப்பில் பேசிய கவிதா, வரும் ஏப்ரல் 25 அன்று முனீராபாதில் நடைபெறவுள்ள நிகழ்ச்சியில் புதிய கட்சியின் பெயர் மற்றும் கொடி ஆகியவை அறிமுகம் செய்யப்படும் என அறிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் கூறுகையில், இதுவரை ஆண்கள் தொடங்கிய கட்சிகள் மட்டுமே தெலங்கானாவில் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன என்றும், தனது கட்சிக்கு பெண்கள் மற்றும் இளம் தலைமுறையினர் ஆதரவளிக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.




## ஊட்டி | பாலியல் வன்கொடுமை வழக்கில் இளைஞருக்கு சாகும் வரை ஆயுள்

**ஊட்டி, மார்ச்.29:** பெண்ணுக்கு பாலியல் வன்கொடுமை செய்த குற்றவாளிக்கு சாகும் வரை ஆயுள் தண்டனை விதித்து உதகை மகளிர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

நீலகிரி மாவட்டம் ஊட்டி மஞ்சனக்கொரை பகுதியைச் சேர்ந்த கணவரை பிரிந்து வாழும் 42 வயது பெண் ஒருவர் அங்குள்ள பானிபூரி கடையில் பணிபுரிந்து வந்தார்.

இந்நிலையில் கடந்த 2024-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் பணி முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது, இளைஞர் ஒருவர் வழிமறித்து அவரை பாலியல் வன்கொடுமை செய்துவிட்டு தப்பினார்.

அந்த பெண்ணின் உறவினர்கள் அவரை மீட்டு மருத்துவமனையில் அனுமதித்தனர். இதுகுறித்த புகாரின்பேரில் ஊட்டி கீழ்தலையாட்டு மந்து பகுதியைச் சேர்ந்த சதீஷ்குமார் (26) என்பவர் கைது செய்யப்பட்டார்.

இந்த வழக்கு விசாரணை ஊட்டி மகளிர் நீதிமன்றத்தில் நடந்து வந்தது. இந்த வழக்கை விசாரித்த நீதிபதி செந்தில் குமார், குற்றவாளிக்கு சாகும் வரை ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு ரூ.5 லட்சம் இழப்பீடாக வழங்க மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என நீதிபதி உத்தரவிட்டார்.

## 3 ஆண்டுகளாக மாணவிக்கு பாலியல் தொல்லை தந்ததாக அண்ணா பல்கலை. பேராசிரியர் கைது

**சென்னை, மார்ச்.29:** மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்த குற்றச்சாட்டில் அண்ணா பல்கலைக் கழகப் பேராசிரியர் கைது செய்யப்பட்டுள்ளார். சென்னை அண்ணா பல்கலைக் கழகத்தில் 3-ம் ஆண்டு படிக்கும் மாணவி ஒருவர், காவல் ஆணையர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நேரடியாகச் சென்று புகார் ஒன்றை அளித்தார்.

அதில் கூறியிருப்பதாவது: பல்கலைக்கழக விடுதியில் தங்கி படித்து வருகிறேன். 'எனது குடும்பம் ஏழ்மையானது. எனக்கு சென்னை கிண்டியில் உள்ள அண்ணா பல்கலைக் கழகத்தில் பேராசிரியராக பணி செய்து வரும் செங்கல்பட்டைச் சேர்ந்த ஞானவேல் பாபுவின் (50) அறிமுகம் ஒருவர் மூலம் கிடைத்தது.

படித்து பெரிய ஆளாக வேண்டும் என்ற ஆசை மற்றும் கனவு இருந்தது. ஆனால், போதிய வழிகாட்டல் இல்லை. இதை அறிந்த பேராசிரியர் ஞானவேல் பாபு எனக்கு உதவுவதாக நம்பிக்கை அளித்தார். பின்னர், அண்ணா பல்கலைக்கழகத்தில் சேர்ந்து படிக்க உதவி செய்தார்.

கல்வி உதவித்தொகை பெற உதவினார். இதனால், அவர் மீது எனக்கு நன்மதிப்பு ஏற்பட்டது. இந்நிலையில், நாட்கள் செல்லச் செல்ல அவரது அணுகுமுறை மற்றும் செயல்பாட்டில் மாற்றம் ஏற்பட்டது.

எனது செல்போன் எண்ணுக்கு அடிக்கடி தொடர்பு கொண்டார். இரட்டை அர்த்தத்தில் ஆபாசமாக பேசத் தொடங்கினார். மேலும், ஆபாசமான வீடி யோக்கள் மற்றும் குறுஞ்செய்திகளையும் தொடர்ந்து அனுப்பினார்.

இதையடுத்து, நான் படிப்படியாக விலகினேன். நான் கண்டித்தும் கேட்காமல் 3 ஆண்டாக தொடர் அத்துமீறலில் ஈடுபட்டு வருகிறார். அவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அந்தப் புகாரில் மாணவி தெரிவித்திருந்ததாக போலீஸார் கூறினர். இதுகுறித்து, உரிய விசாரணை நடத்த, கோட்டூர்புரம் அனைத்து மகளிர் காவல் நிலைய போலீஸாருக்கு காவல் ஆணையர் அருண் உத்தரவிட்டார்.

அதன்படி, வழக்குப் பதிந்து அவர் வசித்து வந்த கோட்டூர்புரம் குடியிருப்புக்குச் போலீஸார் சென்றனர். ஆனால், அவர் அங்கிருந்து தலைமறைவானார். இதையடுத்து, தனிப்படை அமைத்து போலீஸார் தேடினர்.

இந்நிலையில், அவர் திருநெல்வேலி மாவட்டம் வள்ளியூரில் உள்ள உறவினர் வீட்டில் பதுங்கி இருந்தது தெரிந்தது. பின்னர் அங்குள்ள போலீஸார் உதவியுடன் ஞானவேல் பாபுவை நேற்று தனிப்படை போலீஸார் கைது செய்து சென்னைக்கு அழைத்து வந்தனர்.

முன்னதாக, ஞானவேல்பாபுவை கைது செய்யக்கோரி அண்ணா பல்கலைக்கழகம் முன்பு இந்திய மாணவர் சங்கத்தினர் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதற்கிடையே, பேராசிரியர் ஞானவேல்பாபுவை பணியிடை நீக்கம் செய்து பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்துள்ளது. இதுஒருபுறம் இருக்க அவர் மீது மேலும் சில மாணவிகள் புகார் தெரிவித்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

## சிவகாசி அருகே பட்டாசு ஆலை வெடி விபத்தில் ஒருவர் உயிரிழப்பு - 3 அறைகள் தரைமட்டம்



**சிவகாசி, மார்ச்.29:** சிவகாசி அருகே விஸ்வநத்தம் பட்டாசு ஆலையில் இன்று மாலை ஏற்பட்ட வெடி விபத்தில் 3 அறைகள் தரைமட்டமாகின. இதில் ஒருவர் உடல் சிதறி உயிரிழந்த நிலையில், கட்டிட இடிபாடுகளில் சிக்கிய இரு பெண்கள் காயமடைந்தனர்.

சிவகாசி அருகே விஸ்வநத்தம் பகுதியை சேர்ந்தவர் சங்கர் (50). இவர் சென்னை வெடிபொருள் கட்டுப்பாட்டு உரிமம் பெற்று சிவகாசி அருகே விஸ்வநத்தம் - சித்துராஜபுரம் சாலையில் காமராஜர் நகரில் நடேஷ் ஃபயர் ஒர்க்ஸ் என்ற பெயரில் பட்டாசு ஆலை நடத்தி வருகிறார். இந்த ஆலையில் 20-க்கும் மேற்பட்ட அறைகளில் 50-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பட்டாசு உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றனர்.

வெள்ளிக்கிழமை மாலை 3.50 மணி அளவில் பட்டாசுக்கு மருந்து செலுத்தும்போது வெடி விபத்து ஏற்பட்டது.

இந்த வெடி விபத்தில் அருகே பட்டாசு இருப்பு வைத்திருந்த அறையும், 50 அடி தூரத்தில் இருந்த அறை என 3 அறைகள் இடிந்து தரைமட்டமாகின. இந்த விபத்தில் ஒருவர் உடல் சிதறி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். கட்டிட இடிபாடுகளில் சிக்கி சித்ராசபுரத்தைச் சேர்ந்த பூமாரி (31), பானுப்பிரியா(32) ஆகிய இரு பெண்கள் காயமடைந்தனர். அவர்களை பொது மக்கள் மீட்டு சிகிச்சைக்காக சிவகாசி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும் பட்டாசு ஆலையில் பணியாற்றிய காமராஜர் நகரை சேர்ந்த குருநாதன்(45) என்பவரை தேடி வருகின்றனர். தகவலறிந்து வந்த சிவகாசி தீயணைப்புத் துறையினர் மீட்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். விபத்து குறித்து சிவகாசி கிழக்கு போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

## மாவட்ட அளவில் கணினி குலுக்கலில் பிரிக்கப்பட்ட இவிஎம் இயந்திரங்கள் தொகுதிவாரியாக அனுப்பும் பணி தொடக்கம்



**சென்னை, மார்ச்.29:** தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் மாவட்ட அளவில் கணினி குலுக்கல் மூலம் பிரிக்கப்பட்ட வாக்குப்பதிவு இயந்திரங்கள், தொகுதிவாரியாக அனுப்பும் பணி நேற்று தொடங்கியது.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் பயன்படுத்த வேண்டிய மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் (இவிஎம்) மற்றும் வாக்காளர், தான் செலுத்திய வாக்கினை சரிபார்க்கும் கருவிகளின் (விவிபாட்) முதற்கட்ட பரிசோதனைக்கு பிறகு, அந்தந்த மாவட்ட தேர்தல் அதிகாரிகள் கட்டுப்பாட்டில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

இந்த தேர்தலில் மொத்தம் தலா 90 ஆயிரம் கட்டுப்பாட்டு கருவிகள் மற்றும் வாக்குப்பதிவு இயந்திரங்கள், 97,500 விவிபாட் கருவிகள் பயன்படுத்தப்பட உள்ளன.

இதில் பயன்பாடு போக, பழுதாகும்போது மாற்றுவதற்கான 20 சதவீத இருப்பு வைப்பு இயந்திரங்களும் அடங்கும். மாவட்ட அளவில் வைக்கப்பட்டுள்ள இந்த இயந்திரங்களை, அங்கீகரிக்கப்பட்ட கட்சி பிரதிநிதிகள் மற்றும் மாவட்ட தேர்தல் அதிகாரிகள் முன்னிலையில் கணினி குலுக்கல் முறையில் தொகுதிவாரியாக பிரிக்கும் பணி மார்ச் 23-ல் நடைபெற்றது.

அதைத் தொடர்ந்து, இயந்திரங்களை தொகுதிவாரியாக, தேர்தல் நடத்தும் அலுவலர் அலுவலகம் செயல்படும் வைப்பறைக்குக் கொண்டு செல்லும் பணி, அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் நேற்று தொடங்கியது.

அதன்படி சென்னையில் மாவட்ட தேர்தல் அதிகாரி ஜெ.குமரகுருபரன் தலைமையில் நடைபெற்றது.

இதேபோன்று அனைத்து மாவட்டங்களிலும், அந்தந்த மாவட்ட தேர்தல் அதிகாரிகள் தலைமையில் பணிகள் நேற்று தொடங்கின.

தமிழகம் முழுவதும் தேர்தல் பணியில் ஈடுபடும் அனைத்து வாக்குச்சாவடி அலுவலர்களுக்கும், அந்தந்த தேர்தல் நடத்தும் அதிகாரி அலுவலக வளாகத்தில் இன்று பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன.

## மகாவீர் ஜெயந்தியை முன்னிட்டு மார்ச் 31-ல் மதுக்கடைகள் மூடல்



**சென்னை, மார்ச்.29:** மகாவீர் ஜெயந்தி தினத்தில் மதுபானம் விற்பனை செய்யக்கூடாது, மீறினால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என சென்னை மாவட்ட ஆட்சியர் ரஷ்மி சித்தார்த் ஜகடே தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: மார்ச் 31-ம் தேதி மகாவீர் ஜெயந்தி தினத்தை முன்னிட்டு தமிழ்நாடு மதுபான சில்லறை விற்பனை மற்றும் தமிழ்நாடு மதுபான உரிமம் மற்றும் அனுமதி விதிகளின்கீழ் சென்னை மாவட்டத்தில் உள்ள அனைத்து டாஸ்மாக் மதுபான சில்லறை விற்பனைக் கடைகள், அதைச் சார்ந்த பார்கள், கிளப்புகளை சார்ந்தபார்கள், ஹோட்டல்களை சார்ந்த பார்கள் மற்றும் உரிமம்கொண்ட மதுபான விற்பனையகங்கள், மதுபான கூடங்கள் அனைத்தும் கண்டிப்பாக மூடப்பட வேண்டும்.

மார்ச் 31ம் தேதி (செவ்வாய்க்கிழமை) மகாவீர் ஜெயந்தி தினத்தில் மதுபானம் விற்பனை செய்யக்கூடாது. மீறினால் மதுபானம் விற்பனை விதிகளின்படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## சேலத்தில் மாம்பழம் வரத்து அதிகரிப்பு: வியாபாரிகள் மகிழ்ச்சி



**சேலம், மார்ச்.29:** தமிழ்நாட்டில் மாம்பழ சீசன் தொடங்க உள்ளதால் சேலத்தில் வரத்து அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு மாம்பழ விளைச்சல் கூடுதலாக இருக்கும் என வியாபாரிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். அல்போன்சா இமாம் வசந்த் போன்ற உயர் ரக மாம்பழங்கள் கிலோ ரூ.250 முதல் 300க்கு விற்பனை.

ஈரான் போரினால் பெட்ரோல், டீசல் தட்டுப்பாடு அல்லது லாக் டவுன் ஏற்பட்டால், மாங்கனி விற்பனை பாதிக்கப்படலாம் எனவும் கவலை தெரிவித்தனர்.

## லைபீரிய கப்பல் மூழ்கியதால் பல மாவட்ட கடற்கரைகளில் படிந்த பிளாஸ்டிக் கழிவை அகற்ற வழக்கு

**மதுரை, மார்ச்.29:** கேரள மாநிலம் விழிஞ்சம் துறைமுகம் அருகே கடலில் கவிழ்ந்த லைபீரிய கப்பல் மூழ்கியதால் பல்வேறு கரையோர மாவட்ட கடற்கரைகளில் படிந்துள்ள பிளாஸ்டிக் துகள்களை அகற்றக்கோரிய வழக்கில் மத்திய, மாநில அரசுகள் பதில் அளிக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



ராமநாதபுரம் மாவட்டம் மோர்பண்ணையைச் சேர்ந்த வழக்கறிஞர் தீரன் திருமுருகன், உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனு: விழிஞ்சம் துறைமுகத்தில் கடந்த 2025 மே 25-ல் லைபீரிய நாட்டின் எல்சா-3 என்ற கப்பல் மூழ்கியது.

மூக்கிய கப்பலில் 643 கன்டெய்னர்களில் 1,400 டன் பிளாஸ்டிக் நர்ட்டல்ஸ், 450 டன் எரிபொருள் எண்ணெய் மற்றும் கால்சியம் கார்பைடு ஹைட்ராக்சின் உள்ளிட்ட வேதிப்பொருட்கள் இருந்துள்ளன.

இதன் விளைவாக தற்போது கன்னியாகுமரி, ராமநாதபுரம், தூத்துக்குடி மாவட்ட கடற்கரைகளில் பிளாஸ்டிக் துகள்கள் படிந்துள்ளன. இதனால் கடல் நீர் மாசடைந்து கடல் வாழ் உயிரினங்களும் அழியும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தை கேரள அரசு மாநில பேரிடராக அறிவித்து நிவாரண நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. ஆனால் தமிழக அரசு நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. கேரள அரசு சம்பந்தப்பட்ட கப்பல் நிறுவனத்திடம் ரூ.9,531 கோடி இழப்பீடு கோரியுள்ளது.

எனவே, லைபீரிய கப்பல் கவிழ்ந்ததால் கன்னியாகுமரி, ராமநாதபுரம், தூத்துக்குடி, நெல்லை, தஞ்சாவூர், புதுக்கோட்டை மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள சுற்றுச்சூழல் பாதிப்பை கணக்கிடவும், கடற்கரை பகுதியில் படிந்துள்ள எண்ணெய், பிளாஸ்டிக் துகள்களை அகற்றவும் நிபுணர் குழு அமைக்க வேண்டும்.

கப்பல் உரிமையாளரிடமிருந்து இழப்பீடு வசூலிக்க நடவடிக்கை எடுக்கவும் தமிழக அரசுக்கு உத்தரவிட வேண்டும். இவ்வாறு கூறப்பட்டிருந்தது. இந்த மனுவை நீதிபதிகள் சதீஷ்குமார், ஜோதிராமன் அமர்வு விசாரித்து, மனு தொடர்பாக மத்திய, மாநில அரசுகள் பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணையை ஏப். 29-க்கு தள்ளிவைத்தனர்.

## தமிழகத்தில் எரிபொருள் தட்டுப்பாடு இல்லை; வதந்திகளை நம்ப வேண்டாம்

### பெட்ரோலியம் டீலர்கள் சங்கம் அறிவிப்பு

**சென்னை, மார்ச்.29:** அனைத்து விற்பனை நிலையங்களுக்கும் தடையின்றி எரிபொருள் விநியோகம் செய்யப்படுவதாகவும், எரிபொருள் தட்டுப்பாடு குறித்த வதந்திகளை நம்ப வேண்டாம் என்றும் தமிழ்நாடு பெட்ரோலியம் டீலர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அச்சங்கத்தின் தலைவர் கே.பி.முரளி வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழகம் முழுவதும் பெட்ரோல் மற்றும் டீசல் தட்டுப்பாடின்றி கிடைப்பதை தமிழ்நாடு பெட்ரோலியம் டீலர்கள் சங்கம் உறுதிப்படுத்துகிறது.

பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்களான இந்தியன் ஆயில், பாரத் பெட்ரோலியம், இந்துஸ்தான் பெட்ரோலியம் ஆகியவை அனைத்து சில்லறை விற்பனை நிலையங்களுக்கும் தடையின்றி எரிபொருளை விநியோகம் செய்து வருகின்றன.

தமிழகத்தில் உள்ள அனைத்து பெட்ரோல் நிலையங்களிலும் போதுமான அளவு பெட்ரோல் மற்றும் டீசல் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. சமூக வலைதளங்களில் பரவும் தவறான தகவல்களைப் பொதுமக்கள் நம்ப வேண்டாம் என கேட்டுக்கொள்கிறோம்.

தட்டுப்பாடு ஏற்படும் என்ற அச்சத்தில் மக்கள் அவசரமாகத் தேவைக்கு அதிகமாக எரிபொருள் நிரப்புவதைத் தவிர்க்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உங்கள் அன்றாடத் தேவைக்கு ஏற்ப வழக்கம் போல எரிபொருளைப் பெற்றுக்கொள்ளலாம்.

பொதுமக்களுக்குத் தடையற்ற மற்றும் நம்பகமான எரிபொருளை வழங்க எங்களின் அனைத்து டீலர்களும், எண்ணெய் நிறுவனங்களும் முழு அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருகிறோம். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க 6.48 லட்சம் பேர் புதிதாக விண்ணப்பம்

**சென்னை, மார்ச்.29:** வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க தமிழகம் முழுவதும் 6.48 லட்சம் விண்ணப்பங்கள் புதிதாக பெறப்பட்டுள்ளதாக தமிழகத் தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த காலகட்டத்தில் ரூ.273.71 கோடி மதிப்புள்ள ரொக்கம் உள்ளிட்ட பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தமிழக சட்டப்பேரவை பொதுத்தேர்தலை முன்னிட்டு, கடந்த ஜன.1-ம் தேதியை தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு, சிறப்புத் தீவிர திருத்தத்தின் இறுதி வாக்காளர் பட்டியல் கடந்த பிப்.23-ம் தேதி வெளியிடப்பட்டது.



அன்றிலிருந்து கடந்த 26-ம் தேதி வரை, வாக்காளர் பட்டியலில் புதிதாக பெயர் சேர்ப்புக்காக 6 லட்சத்து 48,285 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. இதில் ஆண்கள் 2 லட்சத்து 89,581, பெண்கள் 3 லட்சத்து 58,500 மற்றும் 3-ம் பாலினத்தவர் 204 பேர் பெயர் சேர்க்க விண்ணப்பித்துள்ளனர்.

அதிகபட்சமாக சோழிங்கநல்லூர- 17,476, மாதவரம் - 10,790, கவுண்டம்பாளையம் - 10,123 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. அனைத்து விண்ணப்பங்களும் பரிசீலிக்கப்பட்டு, வேட்பு மனு தாக்கல் செய்வதற்கான கடைசி நாளான வரும் ஏப்.6-ம் தேதி அடிப்படையில் வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்படும். இப்பட்டியலில் தகுதிவாய்ந்த அனைத்து வாக்காளர்களும் சேர்க்கப்படுவர். சட்டப்பேரவை பொதுத்தேர்தலுக்கு பயன்படுத்தப்படும் வாக்காளர் பட்டியலானது, ஒரு 'ஒருங்கிணைந்த பட்டியலாக' இருக்கும்.

தொடர் திருத்தக் காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட அனைத்துச் சேர்க்கைகளையும் உள்ளடக்கியதாக இருக்கும். வாக்காளர் பட்டியலில் செய்யப்பட்ட சேர்க்கைகள், நீக்கங்கள் மற்றும் திருத்தங்கள் குறித்து தனித்தனியாக பட்டியல்கள் வெளியிடப்படுவதில்லை. மாறாக, அனைத்து வாக்காளர்களும் ஒரே வாக்காளர் பட்டியலில் இடம்பெறுவர், மேலும் அப்பட்டியலே அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுக்கும் வழங்கப்படும்.

மேலும், அனைத்து சட்டப்பேரவைத் தொகுதிகளிலும், ஈடுபடுத்தப்பட்டுள்ள கண்காணிப்புக் குழுக்கள் 24 மணி நேரமும் தீவிரமாக கண்காணித்து வருகின்றன. அந்த வகையில், நேற்று காலை நிலவரப்படி, ரூ.44.89 கோடி ரொக்கம், ரூ.93 லட்சம் மதிப்பு மதுபானங்கள், ரூ.7.60 கோடி மதிப்பு போதைப்பொருட்கள், ரூ.116.07 கோடி மதிப்பு தங்கம், வெள்ளி உள்ளிட்ட விலைமதிப்பற்ற உலோகங்கள், ரூ.104.30 கோடி மதிப்பு இலவசங்கள், பரிசுப்பொருட்கள் என ரூ.273.71 கோடி மதிப்புள்ள பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# மாற்றுத் திறனாளிகள் மீதான தாக்குதல் மிகத் தீவிரமானது

## காவல் துறையின் நடவடிக்கைக்கு ஐகோர்ட் கண்டனம்



**சென்னை, மார்ச்.29:** மாற்றுத் திறனாளிகள் மீதான தாக்குதல் மிகத் தீவிரமானது என காவல் துறைக்கு கண்டனம் தெரிவித்துள்ள சென்னை உயர் நீதிமன்றம், இது தொடர்பாக எழும்பூர் காவல் உதவி ஆணையர் பதிலளிக்க உத்தரவிட்டுள்ளது.

தமிழ்நாடு அனைத்து வகை மாற்றுத் திறனாளிகள் பாதுகாப்பு மற்றும் உரிமைகளுக்கான சங்கத்தின் மாநில பொதுச்செயலாளரான பா.ஜான்சிராணி சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுவில், "தமிழகம் முழுவதுமிருந்து சுமார் 1,800 மாற்றுத் திறனாளிகள் கடந்த பிப்.17 அன்று சென்னை சேப்பாக்கம் சிவானந்தா சாலையில் அமைதியாக கூடி பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஜனநாயக முறையில் போராட்டத்தில் ஈடுபட்டோம்.

அப்போது அங்கு வந்த எழும்பூர் காவல் உதவி ஆணையர் ஜெகதீசன், காவல் ஆய்வாளர் பிரகாஷ் ஆகியோர் போராட்டத்தில் ஈடுபட்ட மாற்றுத்

திறனாளிகளிடம் ராஜரத்தினம் ஸ்டேடியம் பகுதிக்குச் சென்று போராட அறிவுறுத்தினர். அதன்படி அங்கு சென்று அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டோம்.

பின்னர் இரவு 8 மணியளவில் திருமங்கலத்தில் உள்ள திருமண மாளிகையில் தங்கவைப்பதாகக் கூறி 20-க்கும் மேற்பட்ட பேருந்துகளில் ஏற்றிச்சென்று அடிப்படை வசதிகள் இல்லாத பல்வேறு இடங்களில் அடைத்து வைத்து சித்ரவதை செய்தனர்.

கால்களை இழந்த மாற்றுத் திறனாளியான என்னை போலீஸார் பேருந்தில் தூக்கிப்போட்டு கைகளை முறுக்கினர். மயக்கமுற்ற என்னை மருத்துவமனையில் கூட சேர்க்கவில்லை.

பின்னர் அங்கிருந்தவர்களின் உதவியுடன் ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனை அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றேன். மாற்றுத் திறனாளிகளுக்கு எதிராக கடுமையாக நடந்து கொண்ட காவல் துறை அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டும்.

பாதிக்கப்பட்ட எங்களுக்கு ரூ.25 லட்சம் இழப்பீடு வழங்க உத்தரவிட வேண்டும். எழும்பூர் காவல் உதவி ஆணையர் ஜெகதீசன் மற்றும் காவல் ஆய்வாளர் பிரகாஷ் ஆகியோரை இடைநீக்கம் செய்ய உத்தரவிட வேண்டும்" எனக் கோரியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதி எம். நிர்மல்குமார் முன்பாக விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதி, போராட்டத்தில் ஈடுபட்ட மாற்றுத் திறனாளிகள் மீது காவல் துறை தாக்குதல் நடத்தியதாக கூறப்படும் குற்றச்சாட்டு மிகத் தீவிரமானது எனக் கண்டனம் தெரிவித்தார்.

பின்னர் இது தொடர்பாக எழும்பூர் காவல் உதவி ஆணையர் பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணையை ஏப்.21-க்கு தள்ளிவைத்துள்ளார்.

# ஆக்கிரமிப்பை அகற்றாவிட்டால் தேர்தல் புறக்கணிப்பு: வையாவூரில் பொதுமக்கள் போராட்டம்




**மதுராந்தகம், மார்ச்.29:** மதுராந்தகம் அடுத்த வையாவூரில் தனிநபர் ஒருவர் சாலையை ஆக்கிரமித்து அமைத்துள்ள சுவற்றை அகற்றாவிட்டால், சட்டப்பேரவை தேர்தலை புறக்கணிக்கப் போவதாக பேனர் அமைத்து பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் அடுத்த வையாவூர் கிராமத்தில் படவேட்டம்மன் கோயில் தெருவில் தனிநபர் ஒருவர், சாலையை ஆக்கிரமித்து சுற்றுச்சுவர் அமைத்துள்ளார்.

இதனால், அந்தத் தெருவில் வசிக்கும் பொதுமக்கள் தங்களின் குடியிருப்புக்கு செல்ல முடியாமல் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், அப்பகுதியில் இறந்தவர்களின் உடலைக் கூட கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிகிறது.

இப்பிரச்சினை குறித்து வருவாய்த் துறை சார்பில் ஆக்கிரமிப்பு செய்தவர்களுக்கு நோட்டீஸ் வழங்கியும் சுற்றுச்சுவர் அகற்றப்படாமல் உள்ளது.

இதனால், வருவாய்த்துறையினர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், ஆக்கிரமிப்பு சுவற்றை அகற்றக்கோரி போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் மீது வழக்கு பதிவு செய்துள்ள போலீஸாரைக் கண்டித்தும், சட்டப்பேரவை தேர்தலை புறக்கணிக்கப் போவதாக, அப்பகுதியில் அறிவிப்பு பேனர் வைத்துள்ளனர்.

# மதுரை மத்திய தொகுதியில் சுந்தர் சி போட்டி: புதிய நீதிக் கட்சி வேட்பாளராக அறிவிப்பு

**சென்னை, மார்ச்.29:** தேசிய ஜனநாயகக் கூட்டணியில் அஇஅதிமுக சார்பில் புதிய நீதிக் கட்சிக்கு ஒதுக்கப்பட்டுள்ள மதுரை மத்திய தொகுதியின் வேட்பாளராக சுந்தர் சி அறிவிக்கப்பட்டுள்ளார்.



இது தொடர்பாக புதிய நீதி கட்சி தலைவர் ஏ.சி. சண்முகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "2026 சட்டமன்றத் தேர்தலில், தேசிய ஜனநாயகக் கூட்டணியில் அஇஅதிமுக சார்பில் புதிய நீதிக் கட்சிக்கு ஒதுக்கப்பட்டுள்ள மதுரை மத்திய தொகுதியில் திரைப்பட தயாரிப்பாளரும் இயக்குநரும் நடிகருமான சுந்தர் சி (சிதம்பரம் பிள்ளையின் மகன்) வேட்பாளராக நிறுத்தப்படுகிறார். இதை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

புதிய நீதிக் கட்சிக்கு ஒதுக்கப்படும் தொகுதி மற்றும் போட்டியிடும் வேட்பாளர் பெயர் ஆகியவை பாஜக சார்பில் வரும் திங்கள் கிழமை அறிவிக்கப்பட உள்ளது. அறிவிப்பு வெளியானதும் முறைப்படி வேட்பாளரை அறிமுகப்படுத்த உள்ளோம்" என தெரிவித்துள்ளார்.

அதிமுக கூட்டணியில் ஏற்கெனவே பாஜகவுக்கு 27 தொகுதிகள், பாமகவுக்கு 18 தொகுதிகள், அமமுகவுக்கு 11 தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டன. அதனைத் தொடர்ந்து ஜி.கே.வாசனின் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சிக்கு 5 தொகுதிகள், பாரிவேந்தரின் இந்திய ஜனநாயக கட்சிக்கு 2 தொகுதிகள், ஜான் பாண்டியனின் தமமுகவுக்கு 1, புரட்சி பாரதம் கட்சிக்கு 1 தொகுதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

தமாகாவுக்கு ஒதுக்கப்பட்ட 5 தொகுதிகளிலும், அக்கட்சி தாமரை சின்னத்தில் போட்டியிடும் என அதன் தலைவர் ஜி.கே.வாசன் அறிவித்தது குறிப்பிடத்தக்கது.

# நாங்கள் விரும்பிய தொகுதிகள் கிடைத்துள்ளன: விசிக தலைவர் திருமாவளவன் பேட்டி

**சென்னை, மார்ச்.29:** விசிக போட்டியிடும் தொகுதிகளை கூட்டணியின் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பார். இன்னும் ஓரிரு கட்சிகளுடன் தொகுதியை இறுதி செய்வதற்கு பேச்சுவார்த்தை நடப்பதால் அதிகாரப்பூர்வமாக நாளை அறிவிப்பார்கள். நாங்கள் விரும்பிய தொகுதிகள் கிடைத்துள்ளன; சுமூகமாக பேச்சுவார்த்தை இருந்தது என்று விசிக தலைவர் திருமாவளவன் பேட்டி அளித்துள்ளார்.

சென்னை அறிவாலயத்தில் செய்தியாளர்களிடம் பேசிய விசிக தலைவர் திருமாவளவன், "விசிக போட்டியிடும் 8 தொகுதிகள் எவை என்பது முடிவானது. விசிக போட்டியிடும் தொகுதிகளை கூட்டணியின் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பார். இன்னும் ஓரிரு கட்சிகளுடன் தொகுதியை இறுதி செய்வதற்கு பேச்சுவார்த்தை நடப்பதால் அதிகாரப்பூர்வமாக நாளை அறிவிப்பார்கள்.

திமுக கூட்டணியில் பிரச்சனை எழாதா? என்று எதிர்பார்ப்பவர்கள் ஏமாந்து போவார்கள். எங்களுக்கு ஒதுக்கப்பட்ட பானை சின்னத்தை புதுச்சேரிக்கும் ஒதுக்க 24ம் தேதி கடிதம் அனுப்பினோம். தேர்தல் ஆணையம் பானை சின்னம் ஒதுக்காததால் புதுச்சேரியில் சுயேச்சை சின்னத்தில் போட்டியிடுகிறோம்" என்றார்.

# மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் ஆட்சியை வழங்குவோம்: பாரிவேந்தர் உறுதி



**சென்னை, மார்ச்.29:** தேசிய ஜனநாயக கூட்டணியில், ஐஜேகே சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை நேற்று அறிவித்த கட்சியின் நிறுவனர் பாரிவேந்தர் "மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் ஆட்சியை வழங்குவதே எங்களின் இலக்கு" என்று தெரிவித்தார்.

இந்திய ஜனநாயகக் கட்சிக்கு (ஐஜேகே) பல்லாவரம், குன்னம் தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இதற்கான வேட்பாளர்களை, கட்சியின் நிறுவனர் பாரிவேந்தர் மற்றும் தலைவர் ரவி பச்சமுத்து ஆகியோர் நேற்று அறிவித்தனர். பல்லாவரம் தொகுதி வேட்பாளராக வழக்கறிஞர் வெங்கடேசனும், குன்னம் தொகுதி வேட்பாளராக சரண்யா அன்பழகனும் அறிவிக்கப்பட்டனர். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய பாரிவேந்தர், "தமிழகத்தில் ஊழல், லஞ்சம், விலைவாசி உயர்வு, சட்டம் - ஒழுங்கு குறைபாடு போன்ற பிரச்சினைகள் அதிகரித்துள்ளது. மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் ஆட்சியை வழங்குவதே எங்களின் இலக்கு. பெண்களுக்கு பாதுகாப்பு மற்றும் சம உரிமை வழங்குவது எங்களது கட்சியின் முக்கியக் கொள்கை.

அதனடிப்படையில் குன்னம் தொகுதியில் பெண் வேட்பாளரை நிறுத்தியுள்ளோம். தேர்தலுக்கு குறுகிய காலம் மட்டுமே இருப்பதால், கட்சி சின்னத்தை மக்களிடம் கொண்டு செல்ல சிரமம் ஏற்படும். அதனால் கூட்டணிக் கட்சியின் சின்னமான இரட்டை இலை சின்னத்தில் போட்டியிடுகிறோம்" என்றார்.

# 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி அங்கன்வாடி பணியாளர்கள் விழிப்புணர்வு

**புவனகிரி, மார்ச்.29:** புவனகிரி சட்டமன்ற தொகுதியில் 100 சதவீத வாக்களிப்பை உறுதிப்படுத்தும் விதமாக அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் வருவாய் துறை சார்பில் வண்ண கோலமிட்டு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

புவனகிரி பஸ் நிலையத்தில் அங்கன்வாடி பணியாளர்கள் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தும் வகையில் அழகிய வண்ண கோலங்களை போட்டு அசத்தினர். பின்னர் வாக்களிப்பதன் அவசியத்தை வலியுறுத்தி 100 சதவீதம் என்ற எண் வடிவில் நின்று விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இதில் புவனகிரி தாசில்தார் தமிழ்ச்செல்வன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## அரசியல் கார்னர்

# "நோட்டை வாங்கி ஓட்டை விற்றால் ஓட்டை வாங்கி நாட்டை விற்பார்கள்" - சீமான் பிரச்சாரம்




**சென்னை, மார்ச்.29:** "நீங்கள் நோட்டை வாங்கி ஓட்டை விற்றால், அவர்கள் ஓட்டை வாங்கி நாட்டை விற்பார்கள்" என்று திருவண்ணாமலையில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரத்தில் நாதக தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்தார்.

திருவண்ணாமலை, கீழ்பென்னாத்தூர், செங்கம் ஆகிய சட்டப்பேரவை தொகுதிகளில் போட்டியிடும் நாதக வேட்பாளர்களை ஆதரித்து சீமான் நேற்று பிரச்சாரம் செய்தார்.

அப்போது பேசிய அவர் "மொழி அழிந்தால் ஒரு இனம் அழியும். இனம் அழிந்தால் அந்த நாடு அழியும். தமிழர் எழுச்சி பெற வேண்டும் என்றால் தூய தமிழரின் ஆட்சி வர வேண்டும் என்ற போது தான் இந்தக் களத்துக்கு நாங்கள் வந்தோம். இந்த நிலத்தை விட்டு நான் ஆந்திராவுக்குச் சென்றால் இந்து, இஸ்லாமியர் என்று சொல்ல முடியாது, நான் தமிழன் என்று தான்சொல்ல முடியும். இந்த நாட்டில் இருந்து உலகில் எங்கு சென்றாலும் நீ தமிழன் அது தான் உனது அடையாளம். சிங்கத்தின் குகைக்குள் சிறுநரிக்கு இடம் கொடுத்தோம். செந்தமிழ் நாட்டின் உரிமை இழந்தோம்.

இது போர். தீய திராவிடர்களுக்கும், தூய தமிழர்களுக்குமான அரசியல் போர். இன்னும் ஒரு முறை இந்த ஆட்சி தேர்ச்சியானால், இந்த திருவண்ணாமலை மாவட்டம் ஆந்திராவின் ஒரு மாவட்டமாக மாறும். இவர்கள் மாற்றுவார்கள். இங்கு எல்லா இடங்களிலும் எல்லா மொழிகளிலும் எழுதி வைத்துள்ளனர். ஆனால், அவர்கள் ஊர்களில் நமது தமிழ் மொழியை எழுதி வைப்பது இல்லை.

மேலும் 5 வருடம் ஆட்சியை அவர்களிடம் கொடுத்தால் நீங்கள் இந்த திருவண்ணாமலை மாவட்டத்தை மறந்து விடுங்கள். இன்று லட்சக்கணக்கான இளைஞர்கள் துடித்துக்கொண்டிருக்கிறோம் மாற்றத்துக்காக. உலகெங்கும் மாறுதல்களும், புரட்சியும் மன்னர்களால், மந்திரிகளால் உருவாக்கப்பட்டது இல்லை. சாதாரண மக்களால் உருவாக்கப்பட்டது.

மாற்றம் என்பது சொல் அல்ல செயல். உலகத்துக்கு சோறு போட்ட கூட்டத்தை, அரிசி, பருப்புக்கு கையேந்தும் கூட்டமா மாற்றி நிறுத்தியுள்ளனர். நீங்கள் நோட்டை வாங்கி ஓட்டை விற்றால், அவர்கள் ஓட்டை வாங்கி நாட்டை விற்பார்கள். வாக்கு வலிமை மிக்க ஆயுதம், அதனை அநீதிக்கு எதிராகத் தூக்கு. இந்த தேர்தல் நமக்கு ஒரு புரட்சிகர மாறுதலுக்கான அரசியல் போர். போர் என்பது ரத்தம் சிந்தும் அரசியல். அரசியல் என்பது ரத்தம் சிந்தாத போர்" என்றார்.

# நாமக்கல் அதிமுக வேட்பாளருக்கு எதிராக கட்சி நிர்வாகிகள் போர்க்கொடி



**நாமக்கல், மார்ச்.29:** "நாமக்கல் அதிமுக வேட்பாளரை மாற்ற வேண்டும். இதை வலியுறுத்தி கட்சிப் பொறுப்பில் இருந்து விலகுகிறோம்" என்று அதிமுக முன்னாள் எம்எல்ஏ பாஸ்கரின் ஆதரவு பெற்ற ஒன்றிய செயலாளர்கள் தெரிவித்தனர்.

இது குறித்து புதுச்சத்திரம் அதிமுக மேற்கு ஒன்றிய செயலாளர் கோபி, நாமக்கல் கிழக்கு ஒன்றிய செயலாளர் ராஜா, மேற்கு ஒன்றிய செயலாளர் சேகர், மோகனூர் ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன் மற்றும் பொதுக்குழு உறுப்பினர் மயில் சுந்தரம் ஆகியோர் இன்று செய்தியாளர்களை கூட்டாக சந்தித்தனர். அப்போது அவர்கள் கூறியது:

"நாமக்கல் தொகுதி வேட்பாளராக மோகன் என்பவரை அறிவித்தது அதிர்ச்சியாக உள்ளது. இதற்கு மாவட்ட செயலாளர் தங்கமணிக்கு பெருந்தொகை கைமாறியிருப்பதாக கட்சியினர் மத்தியில் சந்தேகம் எழுந்துள்ளது. இதற்கு எங்களிடம் ஆதாரம் எதுவும் இல்லை.

பணம் ஒன்றையே குறிக்கோளாக கொண்டு வேட்பாளராக வந்துள்ள நபரால் எங்களுக்கு பாதுகாப்பற்ற சூழல் நிலவி வருகிறது. எனவே, கட்சியினர் ஒட்டுமொத்தமாக பதவியில் இருந்து விலகிக் கொள்வதாக முடிவெடுக்கப்பட்டுள்ளது.

நாமக்கல் மேற்கு, கிழக்கு மற்றும் மோகனூர், புதுச்சத்திரம் என 4 ஒன்றிய செயலாளர்கள், ஒரு துணை ஒன்றிய செயலாளர், ஒரு பொதுக்குழு உறுப்பினர் உள்பட மாநகரத்தில் உள்ள 39 வார்டு செயலாளர்கள் மற்றும் 80 சதவீத கிளை செயலாளர்கள் என அனைவரும் பொறுப்பில் இருந்து விலகுவதாக கையெழுத்திட்டு கடிதம் அளித்துள்ளனர்.

இதனை நாங்கள் பொதுச் செயலாளரிடம் வழங்க உள்ளோம். கட்சிக்கு எதிராக வேலை செய்த நபர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார். அவருக்கு நாங்கள் தேர்தல் பணி செய்ய இயலாது என்பதால் பதவியில் இருந்து விலகுகிறோம். பொதுச் செயலாளரை, மாவட்ட செயலாளர் தங்கமணி மிரட்டியதால் மோகன் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

நாமக்கல் தொகுதியை மாவட்ட செயலாளர் புறக்கணித்து வருகிறார். பொங்கல் பண்டிகை சமயத்தில் மாவட்ட செயலாளர் தங்கமணி பரிசு வழங்கினார். ஆனால் நாமக்கல் தொகுதியில் மட்டும் வழங்கவில்லை. அதேவேளையில் தற்போது அறிவிக்கப்பட்டுள்ள வேட்பாளரை மாற்றம் செய்ய வேண்டும். யாரை வேண்டுமானாலும் வேட்பாளராக அறிவிக்கட்டும் மோகன் வேண்டாம்" என்றனர்.

முன்னதாக, நாமக்கல் அதிமுக வேட்பாளரை மாற்ற வலியுறுத்தியும், மாவட்ட செயலாளர் தங்கமணிக்கு எதிராகவும் கோஷம் எழுப்பப்பட்டது.

நாமக்கல் தொகுதி அதிமுக முன்னாள் எம்எல்ஏ கே.பி.பி.பாஸ்கர், நாமக்கல் தொகுதியில் போட்டியிடுவதற்கான பணிகளில் ஈடுபட்டு வந்தார். இதற்காக நாமக்கல் தொகுதிக்கு உட்பட்ட பகுதியில் கடந்த இரு மாதங்களாக 'கிடா' வெட்டி கட்சியினர் மற்றும் மக்களுக்கு விருந்து படைத்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

PUBLISHED BY R.S ROSHINE PRINTED BY R.S. ROSHINE ON BEHALF OF R.S. ROSHINE PRINTED AT J.M. PROCESS, NO 29, V.N. DOSS ROAD, BORDERTHOTTAM, MOUNT ROAD, CHENNAI – 600002.
AND PUBLISHED FROM NO. 42/62, BUCHAMMAL STREET, 1ST FLOOR, NEW WASHERMENPET, TONDIARPET, CHENNAI, TAMILNADU – 600081. EDITOR: R.S.ROSHINE, PH: 8122836299, E-MAIL: ANANDABHASKARNEWS@GMAIL.COM